வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 04 02.06.2023 வெள்ளிக்கிழமை இதழ் : 175 பக்கங்கள் : 16

# 2048இல் அபிவிருத்தியடைந்த நாடாக இலங்கை உருவாகும்



## திட்ட வரைபடத்தை முன்வைத்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 02

ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்த நிலைக்கு நாட்டை மீண்டும் இட்டுச்செல்ல யாரையும் அனுமதிக்கமாட்டோம் என்று கூறிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 2048ஆம் ஆண்டு அபிவிருத்தி அடைந்த நாட்டை உருவாக்குவதே எனது போராட்டம் என்றும் தெரிவித்துள்ளார். 15

## சீமெந்தின் விலை ரூ. 300ஆல் குறையும்?

கொழும்பு, ஜூன் 02

சீமெந்து (50 கிலோ) பைக்கற் ஒன்றின் விலை 300 ரூபாயால் குறைவடையும் என்று எதிர்பார்ப்பதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

கட்டுமானத் துறையை மேம்படுத்துவதற்காக இரும்பு, ஓடுகள், அலுமினியம் மற்றும் கம்பிகளை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுடன் விலை குறைப்பு குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும், விலையை 15

## வெளிச்சத்தை பாய்ச்சி மீன்பிடி; தடுக்குமாறு ஜனாதிபதிக்கு மனு!

### வடமராட்சி வடக்கு மீனவர்கள் விடுத்தனர்

வடமராட்சி, ஜூன் 02

காங்கேசன்துறை தொடக்கம் பருத்தித்துறை வரையான கடல் பிரதேசத்தில் வெளிச்சத்தை பாய்ச்சி சுருக்கு வலை தொழில் இடம்பெறுவதால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்று வடமராட்சி வடக்கு மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று அவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தனர்.

வட மாகாண கடற்றொழிலாளர் சமாசங்களின் 15



வரலாற்று புகழ்பெற்றதும் பாடல் பெற்ற தலமுமான மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தின் தேர்த் திருவிழாவான நேற்று பஞ்ச ரதங்கள் அணிவகுத்தபோது....!

## வைப்பு, கடன்களின் வட்டி வீதம் குறைப்பு

கொழும்பு, ஜூன் 02

பணவீக்கத்தில் மிகவேகமான வீழ்ச்சியால் வைப்புகள் மற்றும் கடன்களுக்கான வட்டிவீதங்களை முறையே 13 மற்றும் 14 சதவீதமாகக் குறைக்கத் தீர்மானித்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அறிவித்துள்ளார்.

நாணய சபை கூட்டத்தின் பின்னர் நேற்றைய தினம் மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாணய சபைக் கூட்டத்தில் துணை நில் வைப்பு வசதிவீதம், துணை நில் கடன்வசதிவீதம் ஆகிய கொள்கை வட்டிவீதங்களை 250 15

## எரிபொருள் இருப்பை பேணாத நிலையங்கள்மீது நடவடிக்கை

### எரிபொருள் அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 02

50 வீத இருப்பை சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களும் பேண வேண்டும் என்பது கட்டாயம். இதனைப் பின்பற்றாத நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த இரு நாட்களாக நாட்டில் எரிபொருளைப் பெற மக்கள் வரிசைகளில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது. இந்த நிலையிலேயே மேற்படி எச்சரிக்கையை எரிசக்தி அமைச்சர் வெளியிட்டுள்ளார். 15

## முச்சக்கர வண்டி சாரதி கொலை சக சாரதிக்கு தூக்கு தண்டனை!

வவுனியா, ஜூன் 02

சக முச்சக்கர வண்டி சாரதியை கொலை செய்த குற்றத்துக்கு மற்றொரு முச்சக்கர வண்டி சாரதிக்கு தூக்குத் தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

இரண்டாவது எதிரியாக குறிப்பிடப்பட்டிருந்தவர் மீதான குற்றச்சாட்டுக்கள் சாட்சியங்கள் ஊடாக நிரூபிக் கப்படாததால் அவரை விடுதலை செய்யவும் உத்தரவிட்டது மேல் நீதிமன்று. 15

## நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஐ. எம். எவ்வின் உதவி அவசியம்!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஜூன் 02

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு அவசியம் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கென்ஜி ஒக்கமுரா உள்ளிட்ட 15

## கிளிநொச்சிக்குள் பிற மாகாண மணலை கொண்டு செல்ல தடை

### ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முடிவு

கிளிநொச்சி, ஜூன் 02

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வை தடுப்பதற்கான நடவடிக்கையாக வடக்கு மாகாணத்துக்கு வெளியில் இருந்து கொண்டு வரப்படும் மணலை கிளிநொச்சி மாவட்டத்துக்குள் கொண்டு செல்லத் தடை விதிக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. 15

## நாடு வழமைக்கு திரும்பியுள்ளது பொருளாதாரமும் முன்னேற்றம்!

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 02

நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளதை அவதானிக்க முடிகிறது. பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணப்படுகிறது. அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

- இவ்வாறு மகிந்த ராஜபக்ஷ எம். பி. தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம், அநுராதபுரம் சிறீ மகா விகாரை, ருவன்வெலிசாய ஆகியவற்றில் மத வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

கேள்வி : அமைச்சு பதவிகள் இல்லாத காரணத்தால் ஆளும் தரப்பின் ஒருதரப்பினர் அதிருப்தியடைந்துள்ளார்களா?

பதில் : அவ்வாறு இருப்பார்களாயின் அதுவும் 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# நடாஷா அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட ஒருவர்!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜுன் 02

**பௌத்த சமயத்துக்கு அவதூறு ஏற்படுத்திய நடாஷா என்ற பெண் பௌத்தத்துக்கு எதிராகச் செயற்பட அமெரிக்காவினால் திட்டமிட்டு உருவாக்கி மேடையில் ஏற்பட்ட பெண் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

நடாஷா என்ற இந்த பெண் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் வர்த்தகப் பிரிவில் பணியாற்றியவர்.

இதனை தவிர யு.எஸ். எயிட் நிறுவனத்திலும் தொழில் புரிந்துள்ளார்.

இவ்வாறானவர்களே "சுத்தோனாவின் பொடியன்" எனக் கூறி பௌத்த சமயத்திற்கு அவதூறை ஏற்படுத்துகின்றனர்.

இவை அப்பாவித்தனமான நடவடிக்கைகள் அல்ல-என்றார். (அ)



# அம்பாறையில் மீண்டும் எரிபொருளுக்கு வரிசை

கொழும்பு, ஜுன் 02

எரிபொருள் விலை புதன் கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டு புதிய விலைகள் அறிவிக்கப்பட்டபோதிலும் அம்பாறை மாவட்டத்தில் பல பகுதிகளில் பெற்றோல் தட்டுப்பாடு நிலவுவதுடன் மக்கள் மீண்டும் வரிசையில் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

அத்துடன் மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு என்ற தகவல் பரவ ஆரம்பித்துள்ள நிலையில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் முண்டியடித்தனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை சாய்ந்தமருது மருதமுனை சம்மாந்துறை நிந்தவூர் அட்டாளைச்சேனை ஒலுவில் உள்ளிட்ட பகுதிகளில் இரவு முதல் பெற்றோல் எரிபொருளை மக்கள் பெறுவதற்கு நேற்று காலை வரை எரிபொருள் நிலையங்களுக்கு வருகை தந்ததைக் காண முடிந்தது.

கடந்த காலங்களில் கியூ. ஆர் முறைமையினால் சீராக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விநியோகம் திடீரென இவ்வாறு நெருக்கடிக்குள்ளானமை மக்கள் மத்தியில் சிறு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் விலை குறைப்பும் ஏமாற்றத்தை தந்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்தனர். (அ)

# காதலியைப் படுகொலை செய்து குழி தோண்டி புதைத்த காதலன்!

கொழும்பு, ஜுன் 02

மதவாச்சிப் பகுதியில் பெண் ஒருவரைக் கொலை செய்து புதைத்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அப்பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரைக் கடந்த சில தினங்களாகக் காணவில்லை என அவரின் உறவினர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் காணாமல் போன பெண்ணின் காதலனிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய குறித்த நபர் தனது காதலியான காணாமல் போன பெண்ணைப் படுகொலை செய்து தனது தோட்டத்தில் புதைத்துள்ளார் என வாக்குமூலம் வழங்கினார்.

பெண்ணின் சடலம் மீட்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# 111 மருந்துகளுக்கு தட்டுப்பாடு

கொழும்பு, ஜுன் 022

இலங்கையில் தற்போது 111 ஔடதங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த விடயத்தில் அரசு சிறப்பு கவனம் செலுத்தி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் நாட்டில் சுமார் 200 பொருட்களுக்கு தட்டுப்பாடு இருந்தது. தற்போது அது 111 ஆகக் குறைந்துள்ளது.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அது 70 ஆகக் குறையும் என்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நம்பிக்கை வெளியிட்டார்.

ஔடதங்களை கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி உள்ளதா? என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள ரம்புக்வெல, கடந்த ஆண்டை விட பொருளாதார நிலை வலுவடைந்துள்ளதாக தெரிவித்தார்.

எனினும் நிதியை விடுவிப்பதில் பெற்றுக் கொள்வதில் சில சிக்கல்கள் உள்ளதாகவும் சுகாதார அமைச்சர் கெஹலிய கூறினார். (அ)

# புலோலி வில்லிபாதி முருகன் பெருஞ்சாந்திப் பெருவிழா

வடமராட்சி, ஜுன் 02

வடமராட்சி, புலோலி அருள்மிகு வில்லிபாதி முருகன் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபஷ் மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்திப் பெருவிழா இம்மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.26 மணி-8.20 மணி வரையிலான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் 5 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை இடம்பெறும்.

ஆலய பிரதமகுரு அலங்கார பூஷணம் சிவசிறி சிறிபாலகுமாரன் ஐயாவின் உதவியுடன் முத்தமிழ் குருமணி, தேசிய கலாபூஷணம் சிவசிறி அமிர்த சிறீகாந்தக் குருக்கள் பிரதிஷ்டா பிரதமகுருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்திவைப்பார்.

கும்பாபிஷேகத்திற்கு நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறி சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், சிவபூமி அறக்கட்டளை நிறுவனத் தலைவர் கலாநிதி ஆறு திருமுகன் ஆகியோர் ஆசியுரைகளை வழங்குவார்கள். தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேக பூசை வழிபாடுகள் இடம்பெறும். (அ-02)

# வவுனியாவில் எரிபொருள் பெறுவதற்கு நீண்ட வரிசை

வவுனியா, ஜுன் 02

வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெற்றுக்கொள்ள வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது.

அத்தோடு நகர மத்தியில் உள்ள இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை என பதாகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெற்றுக்கொள்ள நேற்று காலை முதல் மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் மற்றும் ஓட்டோச் சாரதிகள் வரிசையில் காத்து நின்றதை அவதானிக்க முடிந்தது. எரிபொருட்களின்விலைகள் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆணொருவர் வெட்டிக்கொலை

கொழும்பு, ஜுன் 02

ஹொரண பகுதியிலுள்ள ஆடைத்தொழிற்சாலைக்கு முன்னால் வைத்து நபர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை, சுனாமி வீட்டுத் திட்டப் பகுதியில் வசிக்கும் நபரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

கொலையாளி அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் இறங்கியுள்ளனர். (அ)

# இலங்கைச் சிறுவனை கனடாவில் காணவில்லை

றொறன்ரோ, ஜுன் 02

கனடாவின் தெற்கு வின்னிபேர்க் என்ற பிரதேசத்தில் இருந்து இலங்கை சிறுவன் ஒருவர் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 15 வயதான இனுக குண திலக்க என்ற சிறுவனையே காணவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அவரை தேடும் முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 24ஆம் திகதி வகுப்புக்கு சென்று அங்கிருந்து வெளி யேறிய பின்னரே அவரை காணவில்லை என்று அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். இனுக குணதிலக்க இறுதி யாக கடந்த 24 ஆம் திகதி காலை போர்ட் ரிச்மண்ட் பகு தியில் காணப்பட்டதாக தக வல்கள் வெளியாகியுள்ளன.

இந்தநிலையில் தகவல் தெரிந்தவர்கள் வின்னிபெக் காவல் சேவையின் காணாமல் போனோர் பிரிவுக்கு அழைப்பை ஏற்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. (அ)

## கௌதாரிமுனையில் மண்ணகழ்வு;

# மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் எழுந்த சர்ச்சை

கிளிநொச்சி, ஜுன் 02

பூநகரி, கௌதாரி முனை பகுதியில் மண்ணகழ்வு மேற்கொள்ளப்பட்ட விவகாரம் தொடர்பில் நேற்று நடந்த கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கடும் விவாதம் இடம்பெற்றது.

பூநகரி பகுதியில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்துக்கு அனுமதி வழங்குவது தொடர்பான விடயம் பேசப்பட்டுக்கொண்டிருந்தது.

குறித்த சந்தர்ப்பத்தில் கௌதாரிமுனைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மணல் அகழ்வின்போது, அகழ்வில் ஈடுபட்ட தரப்பினால் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் அவை நடைபெற்றிருக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

இதன்போது கூட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த சம்பவம் எப்போது இடம்பெற்றது என வினவினார்.

2017, 2018 களில் இடம்பெற்ற குறித்த விடயத்தின்போது, யார் அபிவிருத்திக்குழுத் தலைவர்களாக இருந்தனர் என வினவிய போது கூட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டு சர்ச்சை எழுந்தது.

அந்தக் காலப்பகுதியில் முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன், விஜயகலா மகேஸ்வரன், அங்கஜன் இராமநாதன், எஸ். சிறிதரன் ஆகியோர் இந்தக் குழுவுக்கு இணைத் தலைவர்களாக இருந்தனர் அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாறு இணைத் தலைவர்களாக இருந்தபொழுது ஏன் அதனை கண்டுகொள்ளவில்லை என அமைச்சர் கேட்டபோது சர்ச்சை எழுந்தது. (அ)

ஈழநாடு
Eelanadu
02.06.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தலைவரை தேடும் தொண்டர்கள்?

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தருமான பா. அரியநேந்திரன் தங்களின் தலைவர் யாரென்று தெரியவில்லையென்று குறிப்பிட்டிருக்கின்றார். கதிரையில் ஒரு தலைவரை பார்த்த நாங்கள் இப்போது பத்து தலைவர்களை கதிரையில் காண்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். இதன் மூலம் தமிழரசு கட்சிக்குள் நிகழும் தலைமைத்துவ போட்டி தொடர்பிலேயே அரியநேந்திரன் கவலைப்படுவது தெளிவாகின்றது.

அரியநேந்திரன் கூறுவது உண்மைதான் - தமிழரசு கட்சியின் உண்மையான தலைவர் யாரென்று எவருக்கும் தெரியவில்லைதான். இந்தப் பின்புலத்தில்தான் அவ்வப்போது கட்சியின் தலைவர் யார் என்னும் கேள்வி ஊடகங்களில் செய்திகளாகின்றன. கட்சியிலுள்ள பலரும் அவ்வப்போது, தான் தலைமையை பொறுப்பேற்க தயாராக இருப்பதாக அறிக்கை வெளியிடுகின்றனர்.

2009இற்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியலில் சம்பந்தனை அனைவருமே ஒரு தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான காங்கிரஸ் கட்சியை தவிர, தமிழ்த் தேசியம் பேசும் ஏனைய கட்சிகள் அனைத்துமே சம்பந்தனை தங்களின் தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தனர். இந்த அடிப்படையில்தான், சம்பந்தன் தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்க முடிந்தது. சம்பந்தன் தற்போது நோய்வாய்ப்பட்டு அரசியலை தீர்மானிக்கும் தகுதிநிலையை பெருமளவுக்கு இழந்திருக்கின்ற நிலையில்தான், தமிழரசு கட்சியின் அடுத்த தலைவர் தொடர்பான கேள்விகள் எழுந்திருக்கின்றன. சம்பந்தன் தமிழரசு கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து வெளியேறிய பின்னரும்கூட கட்சியை கட்டுப்படுத்தும் ஒருவராகவே இருந்தார்.

அரசியலில் சம்பந்தனின் தவிர்க்க முடியாமையே இதற்கான காரணமாகும். ஆனால், சம்பந்தனைப் போன்று தான் பொறுப்பிலிருந்து வெளியேறுகின்றேன். பிறிதொருவர் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுங்கள்- என்று மாவை சேனாதிராசாவால் கூற முடியாது. ஏனெனில், அதன் பின்னர் கட்சிமீதான முழுக் கட்டுப்பாட்டையும் அவர் இழந்துவிடுவார். இந்த நிலையில்தான், கட்சியின் அடுத்த தலைவர் யார் என்னும் கேள்வியும் தங்களின் தலைவர் யார் என்று தங்களுக்கு தெரியவில்லையென கட்சியின் உறுப்பினர்கள் கவலைப்படுகின்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது.

ஆளுமையுள்ளவர் எவரோ அவர்கள் கட்சியில் என்ன பொறுப்பில் இருந்தாலும் அவர்களை மற்றவர்களால் தவிர்க்க முடியாமல் போகும். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் சுமந்திரன் இல்லாத தமிழரசு கட்சியை கற்பனை செய்வது கட்சியிலுள்ள பலருக்கு இயலாத காரியமாக இருக்கலாம். இதனை சுமந்திரனே ஒருமுறை வேறு விதமாகக் கூறியிருந்தார். எவரும் தலைவராக இருக்கலாம் ஆனால், தீர்மானங்கள் எவரால் மேற்கொள்ளப்படுகின்றது என்பதே முக்கியமானது. ஆளுமையுள்ளவர்களின் கருத்துகளே இறுதியில் கட்சியின் தீர்மானமாக மாற்றமடையும்.

தவிர, தமிழ்த் தேசிய அரசியலில் காணப்படும் பிறிதொரு சிக்கலான பக்கம் - கட்சியில் ஒருவரின் இடமென்பது அவரின் பாராளுமன்ற உறுப்புரிமையால் தீர்மானிக்கப்படுகின்றது. பாராளுமன்ற உறுப்புரிமை இல்லாதவர்களுக்கு கட்சியில் குரல் இல்லாமல் போய்விடுகின்றது. மாவை சேனாதிராசா தேர்தலில் தோல்வியடைந்த நிலையில்தான் அவரின் குரல் நலிவுற்றது. இது ஆரோக்கியமானதல்ல. ஆனால், இதுதான் தற்போது தமிழ் கட்சிகளின் அரசியலாக இருக்கின்றது.

பாராளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்து விட்டால் அதன் பின்னர் ஒருவரின் முக்கியத்துவம் இல்லாமல் போய்விடுகின்றது. தமிழ்த் தேசிய அரசியல் வெறும் தேர்தல் அரசியலாக சுருங்கிவிட்டது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். ஒருவர், பாராளுமன்றத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும்கூட, அவரின் தலைமைத்துவத்தை எவராலும் தாண்டிச் செல்ல முடியாமல் இருக்க வேண்டும். அவ்வாறான தகுதிநிலையில் இருக்கும் ஒருவர்தான் மக்களின் தலைவராக இருக்க முடியும். இவ்வாறான தலைமைத்துவமானது, வாக்குகளால் உருவாவதில்லை. உண்மையில் எவரை பின்தொடர்வதற்கு மக்கள் இருக்கின்றார்களோ - அவரே தலைவராவார். இந்த தகுதிநிலையுடன் இப்போது எவருமே இல்லை. எனவே, தமிழ் மக்களுக்கு ஆற்றல்மிக்க தலைமையென்று ஒன்றில்லை என்பது உண்மைதான்.

# ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்த முயற்சி செய்கின்றது அரசாங்கம்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 02

ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் ஊடகத்துறையைக் கட்டுப்படுத்தி, ஊடக சுதந்திரத்தை இல்லாது செய்யவே அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கமானது ஜனநாயகத்திற்கு எதிரான செயல்பாடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

அந்தவகையில், ஒளிபரப்பு ஒழுங்குப்படுத்தல் சட்டமூலத்தை கொண்டுவர தற்போது நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன் ஊடாக ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கருதப்படும் ஊடகத்துறையை கட்டுப்படுத்தி, ஊடக சுதந்திரத்தை இல்லாது செய்யவே அரசாங்கம் முயல்கின்றது.

இந்த சட்டம் நடைமுறைக்கு வந்தால் 6 மாதங்களுக்கு மட்டுமே அலைவரிசைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

வருடாந்திர அனுமதிப் பத்திரம் பெற வேண்டுமெனில், குறித்த அலைவரிசையானது அரசாங்கத்திற்கு சார்பானதா அல்லது மத்தியஸ்தமாக செயல்படுகிறதா என்பது ஆராயப்படும்.

இதனால் தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் கடுமையாக பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரச அனுசரணையுடன் அரசாங்கத்திற்கு சார்பான செய்திகளை மட்டும் மக்களுக்கு வழங்கவேண்டும் என்றே அரசாங்கம் இந்த சட்டத்தைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்க்கட்சிகள் அனைவரும் இதற்கெதிராக ஒன்றிணைந்து, அரசாங்கத்தின் இந்த ஜனநாயக விரோத செயற்பாட்டை தோற்கடிக்க வேண்டும்.

விரைவிலேயே நாம் இந்த ஏகாதிபத்திய நடவடிக்கையை நீதிமன்றின் ஊடாக தோற்கடிப்போம்.

பாராளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம்-என்றார். (அ)

# ஊடகங்களை ஒடுக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 02

ஊடகங்களை ஒடுக்குவதற்காக அரசாங்கம் எடுக்கவுள்ள சில முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அரசாங்கம் தற்போது ஒலிபரப்புத் தொடர்பான சட்டமூலம் ஒன்றினைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்கின்றது.

குறித்த அரசாங்கத்தின் முயற்சியில் குறித்த ஆணைக் குழுவினைச் சேர்ந்த உறுப்பினர்கள் எந்த வேளையும் ஒரு ஊடக நிறுவனத்திற்குள் சென்று விசாரணைகளை நடத்தலாம்.

இந்த விடயம் ஊடக சுதந்திரத்தினை வெகுவாகப் பாதிக்கும் என்பதே எமது குற்றச்சாட்டு.

அரசாங்கம் ஏன் தற்போது அவசர அவசரமாக இந்த ஒலிபரப்புத் தொடர்பான சட்டமூலத்தினைக் கொண்டு வருகின்றது என்ற கேள்வி எம் மத்தியில் எழுகின்றது.

அரசாங்கம் முன்னர் கொண்டு வருவதற்கு எத்தனித்த புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் என்பவற்றினை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்களை அரசாங்கம் சந்தித்துள்ளது.

இதற்கு ஊடகங்களும் ஒரு காரணமாக இருந்துள்ளன. எனவே முதலில் ஊடகங்களை அடக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் தற்போது இந்த சட்டமூலத்தினைக் கொண்டு வருவதற்கு எத்தனிக்கின்றது.


இது தவறான விடயமாகும். இதற்கு எதிர்க்கட்சி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் நாம் எமது எதிர்ப்பினை வெளியிடுகின்றோம்.

எனவே தற்போது ஊடகங்களை முதலில் அ்டக்கிவிட்டு பின்னர் தமக்கு ஏற்ற விதத்தில் சட்டமூலங்களைக் கொண்டு வரலாம் என அரசாங்கம் நினைக்கின்றது. அவ்வாறு செய்யக்கூடாது. இது தவறான விடயமாகும்.

முதலில் பொருளாதார முன்னேற்றத்தில் கவனம் செலுத்துங்கள் என்றே நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

எனவே புதிய சட்டமூலங்களைக் கொண்டு வருவது போன்ற செயற்பாடுகளை மக்களாணை பெற்ற அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் முன்னெடுக்கலாம் என அரசாங்கம் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நாம் கேட்டுக் கொள்கின்றோம். அதற்கு நிச்சயமாக நாம் ஆதரவு வழங்குவோம்-என்றார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜுன் - 02 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 19
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**
சகோதரர்கள் வகையில் ஒற்றுமை பிறக்கும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**இடபம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

**மிதுனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கடகம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். புதுவேலை கிடைகக்கும். திருப்தி உண்டாகும். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சகஊழியர்களால் நினைத்தை முடிப்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். இனிமையான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள்.தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும்.பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். புது தொழில் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**மகரம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள் உடன்பிறந்தவர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். சாதிக்கும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். உற்சாகமான நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.

# சீமான் உட்பட நாம் தமிழர் நிர்வாகிகளின் ருவிட்டர் கணக்குகள் திடீரென்று முடக்கம்!

## ஸ்டாலின் கண்டனம்

சென்னை, ஜுன் 02

நாம் தமிழர் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்பட அக்கட்சியின் நிர்வாகிகளின் ட்விட்டர் பக்கங்கள் ஒரே நேரத்தில் மொத்தமாக முடக்கம் செய்யப்பட்டுள்ளன.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளராக சீமான் செயல்பட்டு வருகிறார். தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கட்சியை வளர்க்கும் பணியில் அவர் தீவிரமாக இறங்கி உள்ளார். மேலும் தமிழ்நாட்டில் உள்ள திராவிடக் கட்சிகள் மற்றும் தேசிய கட்சிகளுடன் கூட்டணி வைக்கமாட்டேன் என உறுதியாக தெரிவித்து வரும் சீமான் அனைத்து தேர்தல்களிலும் தனித்தே வேட்பாளர்களை அறிவித்து வருகிறார்.

இந்நிலையில் தான் நேற்று திடீரென்று சீமானின் ருவிட்டர் பக்கம் முடக்கம் செய்யப்பட்டுள்ளது. அந்த பக்கத்தில், “சட்டபூர்வ கோரிக்கையை ஏற்று சீமானின் அதிகாரபூர்வ கணக்கு இந்தியாவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். டுவிட்டரில் அவர் கூறியிருப்பதாவது:-

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி உள்ளிட்டோரது ருவிட்டர் கணக்குகள் இந்தியாவில் முடக்கப்பட்டிருப்பது கண்டனத்திற்குரியது. கருத்துகளை கருத்துகளால் எதிர்கொள்வதே அறம். கழுத்தை நெரிப்பது அல்ல. டுவிட்டர் முடக்கத்தை விலக்கி



சமூக வலைத்தளத்தை அதற்கான தரத்துடன் செயல்பட அனுமதிக்க வேண்டும்.

“கருத்துகளை கருத்துகளால் எதிர்கொள்வதே அறம். கழுத்தை நெரிப்பது அல்ல” என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். (அ)

# மண்டபம் அருகே கடத்தல்காரர்கள் கடலில் வீசிய 10 கிலோ தங்கம் மீட்பு!

சென்னை, ஜுன் 02

இலங்கையிலிருந்து படகு மூலம் தங்கம் கடத்தி வரப்பட்ட 10 கிலோ தங்கக் கட்டிகள் நேற்று இராமேஸ்வரம் கடல் பகுதியில் மீட்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து கடல் வழியாக இலங்கைக்கு போதைப் பொருட்கள், தங்கம் உள்ளிட்டவை அடிக்கடி கடத்தப்பட்டு வருகின்றன. இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்கு பின் இந்த கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக அந்த நாட்டில் இருந்து கடத்தல்காரர்கள் அதிகளவில் தங்க கட்டிகளை ராமநாதபுரத்திற்கு கடத்தி வருவது தொடர் கதையாக உள்ளது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு இலங்கை மன்னார் வளைகுடாவில் இருந்து கடல் வழியாக இராமேஸ்வரத்தை அடுத்த மண்டபத்துக்கு தங்க கட்டிகள் கடத்தி வரப்படுவதாக மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

அதிகாரிகள் தகவல் இதையடுத்து இந்திய கடலோர காவல் படை உதவியுடன் அதிகாரிகள் குறிப்பிட்ட கடல் வழித்தடத்தில் ரோந்து மேற்கொண்டனர். அப்போது படகில் வந்த கடத்தல்காரர்கள் மண்டபம் அருகே உள்ள முயல் தீவு பகுதியில் அதிகாரிகளை பார்த்ததும் தாங்கள் கொண்டு வந்திருந்த தங்கக் கட்டிகளை நடுக்கடலில் வீசியதாக தெரிகிறது. இது தொடர்பாக படகில் இருந்த வேதாளையை சேர்ந்த 3 பேரை பிடித்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தினர்.

அவர்கள் கொடுத்த தகவலின் படி ஏற்கனவே கடத்தி வேதாளையை சேர்ந்த ஒருவரது வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3 கிலோ தங்க கட்டிகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதற்கிடையே கடலில் வீசப்பட்ட தங்க கட்டிகளை மீட்பது தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். அதன்படி நிபுணத்துவம் பெற்ற நீச்சல் பயிற்சி பெற்ற, வீரர்கள் உதவியுடன் தங்க கட்டிகள் வீசப்பட்ட கடலில் இறங்கி தேடும் பணி நடந்தது. நவீன சுவாச கருவிகள், கண்ணாடிகள் ஆகியவற்றின் உதவியுடன் நீச்சல் வீரர்கள் ஆழ்கடலில் குதித்து தங்க கட்டிகளை தேடினர். ஆனால் 2 நாட்களாக எதுவும் சிக்கவில்லை. இரவு நேரங்களில் வேறு யாரேனும் அந்தப் பகுதிகளில் இறங்கி தங்க கட்டிகளை எடுத்து விடக்கூடாது என்ற நோக்கத்தில் கடலோர காவல் படையினர் ரோந்து பணியை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் 3ஆவது நாளாக நேற்றும் தங்க கட்டிகளை தேடும் பணி நடந்து வருகிறது. அந்தப் பகுதியில் தற்போது கடல் காற்று அதிகமாக வீசி வருவதால் சில மணி நேரம் பணியில் தொய்வு ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இருப்பினும் அதிகாரிகளின் தகுந்த ஆலோசனையோடு வீரர்கள் தொடர்ந்து தங்க கட்டிகளை தேடி வந்தனர். இவர்களோடு நன்கு பயிற்சி பெற்ற நீச்சல் வீரர்கள் உதவியுடன் கடலோர காவல்படையினரும் குறிப்பிட்ட இடத்தில் இறங்கி தேடும் பணியில் ஈடுபட்டனர். இந்த நிலையில் நேற்று மதியம் ஆழ்கடலில் தங்க கட்டிகள் வைக்கப்பட்டிருந்த பார்சலை கடலோர காவல்படை வீரர்கள் கண்டெடுத்து மீட்டனர். அதில் அதில் 10 கிலோ தங்க கட்டிகள் இருந்தன. இதன் சர்வதேச மதிப்பு ரூ. 10 கோடி ஆகும். (அ)

# “ம.தி.மு.கவில் வாரிசு அரசியல் இல்லை”

சென்னை, ஜுன் 02

ம.தி.மு.க. வின் உட்கட்சி தேர்தல் வருகிற 14 ஆம் திதி நடைபெறுகிறது. இதில் கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது. பொதுச்செயலாளர் பதவிக்கு வைகோ நேற்று மனுதாக்கல் செய்தார். அவைத்தலைவர் பதவிக்கு அர்ஜுன் ராஜ், பொருளாளர் பதவிக்கு செந்தில் லதிபன், முதன்மை செயலாளர் பதவிக்கு துரை வைகோ, துணை பொதுச் செயலாளர் பதவிக்கு மல்லை சத்யா உள்பட பல்வேறு பதவிகளுக்கு இன்று மனுதாக்கல் செய்தனர்.

எந்த புயல் வீசினாலும் ம.தி.மு.க.வை மன உறுதியுடன் நடத்தி வருகிறோம். என்னுடைய மகன் துரை வைகோ வாக்கெடுப்பு மூலமாகவே தேர்ந்தெடுக்கப்பட்டார். ம.தி.மு.க.வில் வாரிசு அரசியல் என்ற பேச்சுக்கே இடமில்லை. இதில் எந்த ஒரு மாற்றமும் இருக்காது. ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி ம.தி.மு.க. பயணிக்கும் என வைகோ தெரிவித்தார்.

வேட்பு மனு தாக்கல் நேற்று முடிவடைந்த நிலையில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் பதவிக்கு வைகோ மட்டுமே மனுதாக்கல் செய்துள்ளார். அவரை எதிர்த்து வேறு யாரும் மனுதாக்கல் செய்யவில்லை. எனவே ம.தி.மு.க. பொதுச்செயலாளராக வைகோ மீண்டும் போட்டியின்றி தேர்வு செய்யப்படுகிறார்.

(அ)

# ஞானசார தேரரை கைது செய்யுங்கள்!

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கோரிக்கை



கொழும்பு, ஜூன் 02

**நடாஷா எதிரிசூரிய பௌத்த சமயத்தை அவமதித்தார் என்று கைது செய்வதற்கு முன்னர் இஸ்லாம் சமயத்திற்கு அவமதிப்பை ஏற்படுத்திய, கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கு தீ வைத்த ஞானசார தேரர் போன்றவர்களுக்கு எதிராக எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கேள்வி எழுப்பியுள்ளார்.**

வெறுப்புணர்வுகளை ஏற்படுத்தும் கருத்துக்களை வெளியிடுவதில், நடாஷாவை விட ஞானசார தேரர், விஷமத்தானமான அழுத்தங்களை முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளார் எனவும் அவர் கூறினார்.

நேற்று அதிகாலை ருவிட்டரில் பதிவு ஒன்றை இட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி, இலங்கை பௌத்தர்கள் உண்மையான பௌத்த விழுமியங்களுக்கு அமைய வாழ்ந்திருந்தால், தற்போது நாடு இந்தளவுக்கான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்காது என கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பௌத்த மதத்திற்கான முழுமையான கௌரவத்தை வழங்கவேண்டும் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். அத்துடன் ஏனைய மதங்களையும் சமமாக மதிக்கவேண்டும்.

நாட்டில் வாழும் அனைத்துப் பிரஜைகளுக்கும் தமது நம்பிக்கை மற்றும் மதத்தை பின்பற்றும் உரிமை இருக்கவேண்டும்.

பௌத்தர்கள் என்ற வகையில் கருணை, இரக்கம் மற்றும் அக்கறை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

மேலும் கருத்தடை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டதாக குற்றம் சுமத்தி கட்டாய விடுமுறையில் அனுப்பி வைக்கப்பட்டு தற்போது அண்மையில் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட குருநாகல் போதனா வைத்தியசாலையின் மகபேறு பிரிவின் மருத்துவர் சாபி தொடர்பாக நாடு முழுவதும் தவறான செய்திகளை பரப்பியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்த நடவடிக்கையை எடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னும் தாமதமாகவில்லை-என்றார்.

(அ)

## வெளிநாடுகளில் நிர்க்கதியான பெண்களை பாதுகாக்க கோரி வவுனியாவில் கவனயீர்ப்பு



வவுனியா, ஜூன் 02

வெளிநாடுகளுக்கு வாழ்வாதாரத்தை தேடி சென்று நிர்க்கதியான பெண்களுக்கு பாதுகாப்பை கோரி வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று இடம்பெற்றது.

வடக்கு-கிழக்கு பெண்கள் கூட்டு ஏற்பாடு செய்திருந்த இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் வவுனியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது, மத்திய கிழக்கு நாடுகளில் தொழிலுக்காகச் சென்று நிர்க்கதியான பெண்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்வதுடன் போலி முகவர்கள் தொடர்பிலும் அரசாங்கம் கவனமெடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. (அ)

## காலி கடற்கரை பகுதியில் பெண்ணின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூன் 02

காலி - கோட்டை கடற்கரை பகுதியில் பெண் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

35 முதல் 40 வயதிற்கிடைப்பட்ட ஐந்து அடி உயரமுடைய பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் கராப்பிட்டி வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 02

டெங்கு தொற்றின் அதிக அபாயம் உள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்ட வைத்திய அதிகாரி பிரிவுகளின் எண்ணிக்கை 61 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் வெப்பமான மற்றும் இடைவிடாத மழையுடன் கூடிய காலநிலையே டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு காரணமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரங்களுடன் ஒப்பிடுகையில், தினசரி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வாரத்தில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 800 ஐ தாண்டியுள்ளதாக வைத்தியர் லஹிரு கொடித்துவக்கு தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வாரத்தைவிட 24 மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 39 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். (அ)

## இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் இத்தாலியில் பயன்படுத்த அனுமதி

கொழும்பு, ஜூன் 02

இத்தாலி நாட்டில் தொழில் புரியும் இலங்கையர்கள், இலங்கையில் செல்லுப்படியான சாரதி அனுமதிப்பத்திரங்களை இத்தாலியில் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

இத்தாலியில் வசித்து வரும் மற்றும் பல தொழில்களில் ஈடுபட்டுள்ள இட்சக்கணக்கான இலங்கை மக்களுக்கு இதுவரை சிக்கலாக இருந்து வந்த சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறும் சிரமங்களைக் கவனத்தில் கொண்டு இந்த அனுமதியை வழங்க இலங்கைக்கான இத்தாலி தூதுவர் ரீட்டா மனேல்லா இணங்கினார் என நீதியமைச்சு கூறியுள்ளது.

இத்தாலியில் வாழும் இலங்கையர்களின் கோரிக்கையை நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, இத்தாலி தூதுவருக்கு அனுப்பியிருந்தார். இதன் பிரதிபலனாக இந்த அனுமதி கிடைத்துள்ளது.

இலங்கைக்கான இத்தாலித் தூதுவருக்கும் நீதியமைச்சருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன் தினம் நீதியமைச்சில் நடைபெற்றது.

இதன்போது இலங்கையில் வசிக்கும் இத்தாலிய பிரஜைகளுக்கும் தமது நாட்டுச் சாரதி அனுமதிப்பத்திரத்தை இங்கு பயன்படுத்த இலங்கை அரசு அனுமதியை வழங்கவேண்டும் எனத் தூதுவர் கோரிக்கை விடுத்தார்.

இத்தாலி மற்றும் இலங்கை இடையில் இருந்து வரும் ராஜதந்திர மற்றும் இரு தரப்பு நட்புறவை கவனத்தில் கொண்டு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் பேச்சு நடத்தி, அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, இத்தாலி துதுவரிடம் கூறியுள்ளார்.

(அ)

## தேசிய பொசன் நிகழ்வுக்கு அரசு அனுசரணை வழங்கும்

கொழும்பு, ஜூன் 02

தேசிய பொசன் நிகழ்வுக்கு அரசாங்கம் அனுசரணை வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் 2 அமைச்சுக்கள் மற்றும் ஒரு திணைக்களத்தினால் மாத்திரம் 288 இலட்சம் ரூபா ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அரச பொசொன் நிகழ்வுக்கும், மிஹிந்தல புனித பூமியை அடிப்படையாகக் கொண்டு நடைபெறும் பொசன் நிகழ்வுகளுக்கும் அரசாங்கத்தின் அனுசரணை கிடைக்கவில்லை என பல்வேறு தரப்பினரும் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

ஆனால், 2020 மற்றும் 2021 கொரோனா சமயத்திலும், 2022 ஆம் ஆண்டிலும் முறையே 4.6 மில்லியன் ரூபா, 2.3 மில்லியன் ரூபா மற்றும் 2.9 மில்லியன் ரூபா என உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டு முதல் லேக் ஹவுஸ் தொடர்ச்சியான நட்டத்தை ஈட்டும் நிறுவனமாக மாறியுள்ளதோடு 2022 ஆம் ஆண்டில் 192 மில்லியன் ரூபா நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் காரணமாக இவ்வருடம் இவ்வாறான வேலைத் திட்டங்களுக்கு அனுசரணை வழங்க முடியாது என லேக் ஹவுஸ் நிர்வாகம் மிஹிந்தல பொசன் குழுவுக்கு அறிவித்துள்ளது.

மிஹிந்தல பொசன் பெரஹரவுக்காக மட்டும் மிஹிந்தல ரஜ மஹா விஹாராதிபதி தம்மரதன தேரர், 170 இலட்சம் ரூபாய் என்ற மதிப்பீட்டுத் தொகையை புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்திருந்தார்.

ஆனால் பாராளுமன்றில் விதித்துள்ள அரச விதிமுறைகளின் பிரகாரம் இவ்வளவு பெரிய தொகையை ஒதுக்க முடியாது என அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன அறிவித்துள்ளார்.

2023 தேசிய பொசன் நிகழ்வுக்கு 30 லட்சம் ரூபா ஒதுக்க வரவு செலவுத்திட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக ஒரு இலட்சம் ரூபா வழங்க முடியும் எனவும் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தேசிய பொசன் நிகழ்வை முன்னிட்டு நீர் விநியோகம் வழங்குவதற்காக 15.7 மில்லியன் ரூபா செலவிட நடவடிக்கை எடுத்துள்ளது.

பொசன் வலயம் அமைப்பதற்காக முப்படை மற்றும் சிவில் பாதுகாப்புப் பிரிவினர் பயன்படுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

பொசன் நிகழ்வுக்கு வரும் சுமார் 60 ஆயிரம் பக்தர்களுக்கு பகலுணவு வழங்க அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களும் பங்களிப்பு செய்ய இருப்பதாக அநுராதபுர மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மலசலகூட வசதி அளிக்க அநுராதபுரம் நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதுகாப்பிற்காக மேலதிக பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதோடு ரயில் மற்றும் இ.போ.ச. பஸ்களின் ஊடாக விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய பொசன் நிகழ்விற்காக 10 மில்லியன் ரூபா அனுப்பியுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் கே.டீ.என். ரஞ்சித் தெரிவித்தார்.

இதற்கமைய இரு அமைச்சுக்கள் மற்றும் ஒரு திணைக்களத்தின் ஊடாக மாத்திரம் 28.8 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது.

இது தவிர மாவட்ட செயலகம், பிரதேச செயலங்கள், நகர சபை, பிரதேச சபைகளின் ஊடாக மேலும் நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பின்னணியில் 2023 தேசிய பொசன் நிகழ்விற்கு அரசாங்க அனுசரணை கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

# மகாவலி 'ஜே' வலயத்துக்கு தகவல் வழங்கவேண்டாம்!

## முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம்

முல்லைத்தீவு, ஜூன் 02

**மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் 'ஜே' வலயத்துக்குக் கோரப்பட்டுள்ள தகவல்களை பிரதேச செயலர்கள், மாவட்ட செயலர்கள் வழங்கக்கூடாது என்று முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**



மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் ஊடாக 'ஜே' வலயத்தை முன்னெடுப்பதற்குரிய தரவுகள் அதன் கீழ் உள்ளடங்கும் பிரதேச செயலர்களிடம் கோரப்பட்டிருந்தன. 37 கிராம அலுவலர் பிரிவுகள் இதன் கீழ் உள்ளடங்குகின்றன. இந்த விடயம் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மகாவலி 'எல்' வலயத்துக்கு ஏற்கனவே எதிர்ப்பு தெரிவித்து ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்டது. இந்த வலயத்துக்கு முல்லைத்தீவின் 34 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கியிருந்தன. இந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். அதன் அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே மகாவலி 'ஜே' வலயத்துக்கும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதியுடன் நேரடியாகக் கலந்துரையாடுவதாகவும் நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ்.வினோநோதராதலிங்கம், கு.திலீபன், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# சமூக ஊடகச் செயல்பாட்டாளர் புரூனோ திவாகாரவுக்கு மறியல்

கொழும்பு, ஜூன் 02

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட சமூக ஊடகச் செயற்பாட்டாளரான புரூனோ திவாகார எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சமூக ஊடகச் செயற்பாட்டாளரான புரூனோ திவாகார குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டிருந்தார்.

நடாஷா எதிரிசூரிய தெரிவித்த கருத்தை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியமைக்காக புரூனோ திவாகார கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பாணந்துறையில் இளைஞர் ஒருவர் துரத்தித் துரத்தி வெட்டிக்கொலை!

கொழும்பு, ஜூன் 02

பாணந்துறை - வெகட பிரதேசத்தில் இளைஞனொருவர் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

பாணந்துறையில் உள்ள ஆடைத்தொழிற்சாலைக்கு முன்பாக குறித்த இளைஞன் வாள் வெட்டு தாக்குதலுக்குள்ளாகிக் காயங்களுடன் ஆடைத்தொழிற்சாலை வளாகத்துக்கு ஓடியுள்ளார்.

இந்நிலையில், குறித்த இளைஞனைப் பின்தொடர்ந்து வந்த கொலையாளி அந்த இளைஞனை வாளால் வெட்டியுள்ளார்.

இந்த சம்பவம் அருகில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி கமெராவில் பதிவாகியுள்ளது.

பாணந்துறை மோதரவில அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 23 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஐஸ் போதைப்பொருளுடன் 2 பெண்கள், இந்தியர் கைது!

கொழும்பு, ஜூன் 02

ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக கூறப்படும் இரண்டு பெண்கள் உட்பட நால்வர் கற்பிட்டி பகுதியில் நேற்று காலை மூன்று கிலோ ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர் என கல்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் தமிழ்நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட இந்தியரும் அடங்குகிறார்.

கைது செய்யப்பட்ட இந்தியர் இலங்கைக்கு ஐஸ் போதைப் பொருளை கொண்டு வந்தவர் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இலங்கைக்கு போதைப்பொருள் கொண்டு வரும் முக்கிய முகவர்களில் இந்திய பிரஜை ஒருவர் என பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் விஷேட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கற்பிட்டி பஸ் நிலையத்தில் போதைப்பொருள் அடங்கிய மூன்று பொதிகளுடன் சந்தேக நபர் ஒருவர் முதலில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் தெரிவித்த தகவலின் அடிப்படையில் இவரிடமிருந்து ஐஸ் போதைப்பொருள் வாங்க வந்ததாகக் கூறப்படும் இரண்டு பெண்கள் உள்ளிட்ட மூவர் கற்பிட்டி, எட்டால பிரதேசத்தில் வாகனத்தில் சென்றபோது கைது செய்யப்பட்டதாக பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். (அ)

# தனது தந்தையைப் படுகொலை செய்தவரை 7 ஆண்டுகளின் பின் கொலை செய்த இளைஞன்!

கொழும்பு, ஜூன் 02

தனது 12 வயதில் தந்தையை கொலை செய்தவரை பழி தீர்ப்பதற்காக ஏழு வருடங்களாக காத்திருந்த சிறுவன் ஒருவன் ஏழு வருடங்களின் பின்னர் கொலைசெய்துவிட்டு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த சம்பவ மொன்று அம்பாந்தோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அம்பாந்தோட்டை, சூச்சி கிராமத்தில் கடந்த 21 ஆம் திகதி இரவு 9.50 மணியளவில் 35 வயதான ஒரு பிள்ளையின் தந்தையொருவர் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி உயிரிழந்தார்.

இவர் இரண்டு கொலைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவரென பொலிஸார் தெரிவித்தனர்.

தனது மனைவி மற்றும் நான்கு வயது பிள்ளையுடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தபோது குடும்பஸ்தர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கொலையுடன் தொடர்புடைய நபர் தலைமறைவாகியிருந்தார்.

இந்நிலையில், 19 வயதான இளைஞரொருவர் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் அம்பாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் கடந்த 29 ஆம் திகதி சரணடைந்துள்ளார். சூச்சி கிராமத்தில் குடும்பஸ்தரைத் தானே கொன்றதாக அவர் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

நீண்ட நேர வாக்குமூலத்தில் பொலிஸாரிடம் அவர் அதிர்ச்சியான தகவலொன்றை வெளியிட்டுள்ளார்.

தானும் தனது தந்தையும் கடந்த 2016 ஆம் ஆண்டு மாட்டுக் கொட்டகைக்குச் சென்று கொண்டிருந்தபோது நபரொருவர் தந்தை மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி கொலை செய்ததாகவும் அப்போது தனக்கு 12 வயதெனவும் அவர் கூறியுள்ளார்.

அந்தச் சம்பவத்துக்கு பழி தீர்க்கும் வகையிலேயே 07 வருடங்கள் காத்திருந்து கொலையாளி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

வாக்குமூலத்தைப் பதிவு செய்த பொலிஸார் சந்தேக நபரான 19 வயது இளைஞரை அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். எதிர்வரும் ஜூன் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதவான் ஒஷத மீகார மஹஆராச்சி உத்தரவிட்டுள்ளார். (அ)

## ஐந்து வருடங்களாக திறக்கப்படாமல் இருக்கும்

# வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தின் மின்சார கட்டணம் ரூபா 4 இலட்சத்தை கடந்தது!

வவுனியா, ஜூன் 02

வவுனியாவில் அமைக்கப்பட்டு 5 வருடமாக திறக்கப்படாமல் உள்ள வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தின் மின்சாரக் கட்டண நிலுவை 4 இலட்சம் ரூபாவைக் கடந்துள்ளதால் குறித்த பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியில் 291 மில்லியன் ரூபாய் செலவில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டு அங்கு 55 கடைத் தொகுதிகளும் உள்ளன.

குறித்த பொருளாதார மத்திய நிலையம் கடந்த 5 வருடங்களாக திறக்கப்படாமல் உள்ள நிலையில் அதன் மின்சாரப் பட்டியல் நிலுவை 4 இலட்சம் ரூபாவைக் கடந்துள்ளது.

தனித்தனி கடைகளுக்குமான மின்சாரப் பட்டியல்களின் ஒருமித்த தொகையே 4 இலட்சத்தை கடந்துள்ளது. இதன் காரணமாக குறித்த பொருளாதார மத்திய நிலையத்துக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அங்கு கடமையில் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, குறித்த பொருளாதார மத்திய நிலையம் திறக்கப்படாதபோதும் கோவிட் தொற்று காலப்பகுதியில் அது சிகிச்சை நிலையமாக குறிப்பிட்ட சில மாதங்கள் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரிடம் கேட்டபோது,

குறித்த பொருளாதார மத்திய நிலையம் திறக்கப்படாதபோதும் கொவிட் தொற்றாளர்களின் பராமரிப்பு நிலையமாக தொழிற்பட்டது. ஆனால் பொருளாதார மத்திய நிலையம் திறப்பதற்கு முன் மின்கட்டண நிலுவை செலுத்தி மீள் மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-எனத் தெரிவித்தார். (அ)

# மத ஐக்கியத்தைப் பாதுகாக்கும் போர்வையில் பேச்சு சுதந்திரத்தை முடக்கும் நடவடிக்கைகள்

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 02

**அடிப்படைஉரிமைகளை கட்டுப்படுத்தும் சட்டத்தின் ஆட்சியை அற்றுப்போகச் செய்யும் இலங்கையின் பலவீனமான அமைதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தவிர்க்கவேண்டும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வேண்டுகோள் வேண்டுகோள் விடுத்துள்ளது**

**இது தொடர்பில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-**

சர்வதேச ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் நகைச்சுவை கலைஞர் நடாஷா எதிரிசூரிய சமீபத்தில் கைது செய்யப்பட்டமை குறித்து மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளது - மத ஐக்கியத்தை பாதுகாப்பது என்ற போர்வையில் கருத்து சுதந்தி ரத்தை முடக்குவதற்கான மிகச் சமீபத்தைய நடவடிக்கை இதுவாகும்.

ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் கைதுகள் இடம்பெறுவது இதுவே முதல் தடவையல்ல. மத தேசிய மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திய கருத்துக்களுக்காக பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எதிரிசூரியாவின் நிகழ்வில் கலந்துகொண்டவர்களை விசாரணை செய்வதற்கான திட்டங்கள் காணப்படுகின்றன என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது கருத்துச் சுதந்திரத்திற்கான தளம் குறைவடைவது , இலங்கையில் மாற்றுக் கருத்தின் மீதான அச்சம் தரும் தாக்கம் என்பவை குறித்த ஏற்கனவே காணப்படும் கரிசனைகளை மீண்டும் அதிகரித்துள்ளது.

இனமத ஐக்கியத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் கருத்துக்கள் பேச்சுக்களை கட்டுப்படுத்துதல் என்ற போர்வையில் கைதுகள் இடம்பெறுகின்றன. ஆனால் இந்த பேச்சுக்கள், கருத்துக்கள், தூண்டுதல், பாரபட்சம், வன்முறை போன்றவற்றை உள்ளடக்கியவையா என்பதை தீவிரமாக ஆராயாமல் கைதுகளை மேற்கொள்வது அரசமைப்பின் 14 ஆவது பிரிவின் மூலமும் ஐ.சி.சி.பி.ஆரின் 19ஆவது பிரி வின் மூலமும் உறுதி செய்யப் பட்ட பேச்சுச் சுதந்திரத்திற் கான அடிப்படை உரிமைகளை மீறும் செயல்.

இந்த ஏற்பாடுகள் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன, சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்த தனிநபர்களை இலக்கு வைப்பதற்காக-மாற்றுக்குரல்களை ஒடுக்குவதற்காக-சுதந்திரப் பேச்சை குற்றமாக்குவதற்காக ஆயுத மாக்கப்படுகின்றன என்பதை முன்னரும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

மிகவும் நெருக்கடியான தருணத்தில் மிகவும் சவாலான சமூக பொருளாதார அரசியல் நெருக்கடிகளில் இருந்து கவனத்தை திசை திருப்ப இவை பயன்படுகின்றன.

மத ஐக்கியத்தை பாதுகாப்பதற்கும் உறுதி செய்வதற்குமான புதிய சட்டங்கள் குறித்த ஊடகத் தகவல்களை மாற்றுக்கொள்கைகளிற்கான நிலையம் கருத்தில் கொண்டுள்ளது.

இலங்கையில் பல சட்டங்கள் காணப்படுகின்றன. எனினும் உண்மையான சவால் என்பது போதியளவு சட்டங்கள் இன்மையில்லை. மாறாக அந்த சட்டங்களை உரிய விதத்தில் நடைமுறைப்படுத் தாமையும், வன்முறைகளை தூண்டியவர்களை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தாமையும் ஆகும்.

இலங்கையின் சமீபத்தைய அனுபவங்கள் இதனை உறுதி செய்கின்றன-ஆதாரங்கள் உள்ள போதிலும் குற்றவாளிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை-என்றுள்ளது. (அ)

# இலங்கை ரூபாய்க்கு விரைவில் கஷ்டகாலம்

கொழும்பு, ஜுன் 02

இலங்கை அரசாங்கம் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துகின்றமை மற்றும் கடனை திருப்பி செலுத்துவது போன்ற காரணங்களால் இலங்கை ரூபாய்க்கு கடினமான காலங்கள் வருமென ஆய்வாளர்கள் கணித்துள்ளனர் என்று புளூம்பேர் செய்தி வெளியிட்டுள்ளது.

290 ரூபாயாகக் காணப்படும் அமெரிக்க டொலரின் பெறுமதி டிசெம்பர் மாத இறுதிக்குள் 350 ரூபாயாக உயர்ந்து இலங்கை ரூபாயின் பெறுமதி குறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் பிணை முறிச் சந்தையின் வரத்து ஆகியவற்றால் இலங்கை நாணயத்தின் ஆதாயம் உலகளவில் வருமானத்தைக் கண்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட 2 பில்லியன் டொலர் நிதி வசதி காரணமாக முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க உதவியதாக இலங்கையின் பொருளாதாரம் ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக அதன் மோசமான நெருக்கடியிலிருந்து மெதுவாக வெளிவருகிறது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும், கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தைப் பெறவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்போது, ரூபாயின் மீது மீண்டும் அழுத்தம் ஏற்பட்டு புதிய தாழ்வுகளுக்குப் பாதை அமைக்கலாம் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஜுன் மாத தொடக்கத்தில் பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கடந்த வாரம் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்த காலாண்டில் ஒரு டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு 280 முதல் 320 வரை வர்த்தகம் செய்யப்படலாம் என்றும் ஆண்டின் இரண்டாம் பாதியில் டொலரின் பெறுமதி உயரும் என்று பர்ஸ்ட் கப்பிடல் தெரிவித்துள்ளது என்று புளூம்பேர்க் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# மு. சிவசிதம்பரத்தின் 21ஆவது நினைவுதினம்

வடமராட்சி, ஜுன் 02

தமிழ்த் தேசியத் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் உடுப்பிட்டி நல்லூர்த் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் மு.சிவசிதம்பரத்தின் 21 ஆவது நினைவு தினம் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி பஸ் நிலைய சதுக்கத்தில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலை அமைந்துள்ள இடத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந் நிகழ்வில் அரசியல்வாதிகள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் அன்னாரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தும் மலரஞ்சலி செய்தும் அஞ்சலிப்பார்கள்.

(அ-02)

# வைத்தியர்கள் உள்ளிட்ட 14 துறையை சேர்ந்தவர்கள் இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்யவேண்டும்!

கொழும்பு, ஜுன் 02

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், வங்கிகள், கட்டடக்கலை வல்லுநர்கள் உள்ளிட்ட 14 துறைகளில் ஈடுபடுபவர்கள் நேற்று முதல் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்வது கட்டாயமாக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவிப்பின்படி, இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த வைத்தியர்கள், இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவகத்தின் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர்கள், இலங்கை பொறியியல் நிறுவனத்தின் உறுப்பினர்கள், இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட 14 துறைகளை சேர்ந்தவர்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2023 டிசெம்பர் 31ஆம் திகதி 18 வயதை நிறைவு செய்தவர்கள் அல்லது 2024 ஜனவரி முதலாம் திகதி அல்லது அதற்குப் பின்னர் 8 வயதை அடையும் சகலரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்வது கட்டாயமாகும். (அ)

# மனித உரிமை ஆணைக்குழு கண்டி அலுவலகத்துக்கு 'சீல்'

## வாகனமும் எடுத்துச் செல்லப்பட்டது

கொழும்பு, ஜுன் 02

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்டி மாவட்ட அலுவலகத்துக்கு சீல் வைக்கப்பட்டு, அதற்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ கப் வாகனம் மே 30 அன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் உள்ளிட்ட குழுவினரால் பிரதான அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

கண்டி மனித உரிமைகள் அலுவலகத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரி பதவி தொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் ஒரு கருத்தையும் ஆணைக்குழு உறுப்பினர்கள் வேறு கருத்தையும் கூறுவதனால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

குமுதுனி விதானகே கண்டி மனித உரிமைகள் அலுவலகத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரியாக சுமார் எட்டு வருடங்களாக கடமையாற்றி வருகின்றார். அவர் கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரால் விரஞ்சன் டயஸ் சுமனசேகர அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்துக்கு எதிரானது. எனவே அது செல்லாது என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பேராசிரியர் விஜித் நாணயக்கார தெரிவித்துள்ளார். தலைவர் வழங்கிய புதிய நியமனத்தின் அடிப்படையில் விரஞ்சன் டயஸ் சுமனசேகர கண்டி அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்க வந்திருந்தபோதிலும், குமுதுனி விதானகே இடமாற்றத்தை ஏற்காமல் அலுவலகத்தில் தங்கியிருந்தமை முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, குமுதுனி விதானகே இடமாற்றத்தை ஏற்றுக்கொள்ளாமல், கொழும்பு அலுவலகத்துக்குச் சென்றமையினால் சேவையை விட்டு விலகியதாகக் கருதி அவரின் சம்பளம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இதற்கு எதிராக குமுதுனி விதானகே மேன்முறையீட்டு நீதிமன்றில் அறிக்கை செய்திருந்ததுடன், அவர் தொடர்ந்தும் பதவியில் இருக்கும் போதே, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் உள்ளிட்ட குழுவினர் கடந்த 30 ஆம் திகதி கண்டி அலுவலகத்துக்கு சென்றனர்.

அங்கு இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஏற்பட்ட அமைதியின்மையினால், ஆணைக்குழுவின் செயலாளரும் ஏனையோரும் அங்கிருந்து வெளியேறி கண்டி பொலிஸாரிடம் சம்பவம் தொடர்பில் புகாரளிக்கச் சென்றுள்ளனர்.

பின்னர் இரவு நேரத்தில் பொலிஸ் குழுவுடன் அலுவலகத்திற்கு சென்று சீல் வைத்து வாகனத்தை எடுத்துச் சென்றுள்ளனர். (அ)

# இராணுவத்திற்கே சவால் விடும் இம்ரான் கான் பாகிஸ்தானில் என்ன நடக்கிறது?

முகமது ஹனீஃப்

பாகிஸ்தானின் ராணுவ அமைப்பு இம்ரான் கானின் வடிவத்தில் நாட்டின் பாதுகாவலரை கண்டுபிடித்துவிட்டதாக பல ஆண்டுகளாக கருதி வந்தது. ஆனால் ஆட்சியில் இருந்து விலகி ஓராண்டுக்குள் பாகிஸ்தான் ராணுவத்தின் நம்பர் ஒன் எதிரியாக இம்ரான் கான் ஆகிவிட்டார். இம்ரான் கானை எதிர்க்க பாகிஸ்தான் ராணுவம் முழு பலத்தையும் பயன்படுத்த முயல்கிறது.

இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி நாடு முழுவதும் ஒடுக்கப்பட்டு வருகிறது. பாகிஸ்தான் முழுவதுமே ஸ்தம்பித்துவிட்டதாகத் தெரிகிறது. தொடர்ந்து அதிகரித்து வரும் பணவீக்கம் பாகிஸ்தானின் பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்துவிட்டது.

வரலாற்றிலேயே மிக மோசமான வெப்ப அலையை பாகிஸ்தான் எதிர்கொண்டு வருகிறது மற்றும் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு நிலைமையை மேலும் கடினமாக்கியுள்ளது.

இப்படிப்பட்ட சூழலிலும் இம்ரான் கானின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன, அவரைத் தடுக்க பாகிஸ்தான் ராணுவம் என்ன செய்யப்போகிறது என்றுதான் ஒட்டு மொத்த பாகிஸ்தானும் சிந்தித்து வருகிறது.

ஓராண்டுக்கு முன்பு அவர் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டபோது அவரது ஆதரவாளர்கள் 'இம்ரான் கான் எங்கள் சிவப்பு கோடு. அதைத் தாண்டக்கூடாது. அவரைக் கைது செய்தால் நாடு எரியும்" என்று கூறினார்கள்.

பல தோல்வியடைந்த முயற்சிகளுக்குப் பிறகு, பாகிஸ்தானின் துணை ராணுவப் படை இறுதியாக இம்ரான் கானை மே 9 ஆம் தேதி கைது செய்தது.

நாடு எரியவில்லை, ஆனால் இம்ரான் கானின் ஆதரவாளர்கள் போராட்டத்தை ராணுவ கண்டோன்மெண்டுகளுக்கு கொண்டு சென்றனர்.

ராணுவத் தலைமையகமான "ஜென்ரல் ஹெட்க்வாட்டருக்குள்" (ஜிஹெச்க்யூ) (பாகிஸ்தானில் மிகவும் பாதுகாப்பான இடமாக இது கருதப்படுகிறது) போராட்டக்கார்கள் நுழைந்தனர். ராணுவப் பலகைகளையும் அவர்கள் உடைத்தனர். அவற்றில் ராணுவ சின்னங்களும் இருந்தன.

லாகூரில் மூத்த ராணுவ ஜெனரல் ஒருவரின் வீடு எரிக்கப்பட்டு சூறையாடப்பட்டது. அவரது மரச்சாமான்கள் மற்றும் கார், தீ வைத்து எரிக்கப்பட்ட வீடியோக்கள் வைரலாயின. ஒரு போராட்டக்கார் ஜெனரல் போல் உடை அணிந்திருந்தார். மற்றொருவர் ஜெனரலின் வளர்ப்பு மயிலை எடுத்துச்சென்றுவிட்டார்.

### ராணுவத்திற்கும், ஆட்சிக்கும் இடையிலான உறவு

அது புரட்சியின் எல்லா அடையாளங்களையும் கொண்டிருந்தது. ஆனால் அது புரட்சி அல்ல. இம்ரான் கான் முதலில் ராணுவத்தால் விரும்பப்பட்டார், பின்னர் ஓரங்கட்டப்பட்டார். இப்போது அவரது ஆதரவாளர்கள் ராணுவத்துடன் மோத முயற்சிக்கின்றனர். இதில் புரட்சி குறைவாக இருந்தது மற்றும் "அன்பு செலுத்துவோரின்" கோபம் அதிகமாக இருந்தது.

பாகிஸ்தானில் பொதுவாக எல்லா பிரதமர்களும் ராணுவத்திடமிருந்து விலகிச்சென்றுவிடுகின்றனர். இது ஒரு வழக்கமாகவே காணப்படுகிறது. நாட்டின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரான சுல்ஃபிகர் அலி புட்டோ தூக்கிலிடப்பட்டார்.

அவரது மகள் பெனாசிர் புட்டோ இரண்டு முறை பிரதம மந்திரி பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பின்னர் ஒரு இளைஞர் அவரை சுட்டுக்கொன்றார். இந்த சம்பவம் முறையாக விசாரிக்கப்படவில்லை.

நவாஸ் ஷெரீப்பும் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். அவர் சிறைக்கு அனுப்பப்பட்டார் மற்றும் நாடு கடத்தப்பட்டார். இப்போது அவர் நாட்டை விட்டு வெளியேறி வாழ்ந்து வருகிறார்.

இப்போது நவாஸ் ஷெரீப் தனது சகோதரரை பிரதமர் பதவியில் அமர வைத்து ஆட்சியை நடத்துகிறார். ஆனாலும் அவரால் நாடு திரும்ப முடியவில்லை.

இம்ரான் கான் கைது செய்யப்பட்ட பிறகு, எந்த ஒரு முக்கிய அரசியல் கட்சியும் செய்ய முடியாததை அவரது ஆதரவாளர்கள் செய்தனர். தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்வதற்குப் பதிலாக, அவர்கள் நேரடியாக ராணுவ கண்டோன்மென்ட்களைத் தாக்கி, பாகிஸ்தான் ராணுவத்தின் ஜெனரல்கள் எப்படி பெரிய பங்களாக்களில் ஆடம்பரமாக வாழ்கிறார்கள் என்பதை பாகிஸ்தானின் சாதாரண குடிமக்களுக்குக் காட்டினார்கள். மயில்கள் மற்றும் பிற செல்லப்பிராணிகள் சுற்றித் திரிவதற்காக பெரிய புல்வெளிகளும், நீச்சல் குளங்களும் அந்த பங்களாக்களில் உள்ளன.



### ராணுவத்தின் மீதான குற்றச்சாட்டுகள் என்ன?

பாகிஸ்தான் ராணுவ கமாண்டர் ஆசிம் முனீர் தனது அரசியல் கட்சியை அழிக்க முயல்வதாக இம்ரான் கான் கைது செய்யப்படுவதற்கு சற்று முன்பு கூறியிருந்தார்.

அதற்கு முன் முன்னாள் ராணுவ தளபதி ஜெனரல் பஜ்வாவை துரோகி என்று அவர் கூறியிருந்தார். அவரை ஆட்சிக்குக் கொண்டு வந்ததிலும், அவரது அரசை நிலைத்திருக்கச்செய்ததிலும் பஜ்வாவுக்கு முக்கியப் பங்கு இருந்தது.

இம்ரான் கான் ஒரு ஐஎஸ்ஐ ஜெனரலை குறிப்பிட்டு, தன்னைக்கொல்ல அவர் செய்த முயற்சி தோல்வியடைந்ததாகக் குற்றம் சாட்டினார்.

அவரும் அவரது ஆதரவாளர்களும் பொதுக்கூட்டங்களில் இந்த ஜெனரலை டர்ட்டி ஹாரி என்று பலமுறை அழைத்தனர்.

இதற்கு முன்பும் பாகிஸ்தானில் உள்ள பல அரசியல்வாதிகள் ராணுவ ஜெனரல்களின் பெயர்களை குறிப்பிட்டு அவர்களை சங்கடப்படுத்த முயன்றுள்ளனர்.

ஆனால், கோர் கமாண்டர்களின் வீடுகள் தீப்பிடித்து எரிவதையும், வாயிலுக்கு வெளியே பெண்கள் போராட்டம் நடத்துவதையும், மரியாதைக்குரிய ராணுவ வீரர்களின் உருவ பொம்மைகள் உடைக்கப்படுவதையும் பாகிஸ்தான் மக்கள் முதன்முறையாக பார்த்தனர்.

பாகிஸ்தான் அரசு எதிர்வரும் தேர்தலை ஒத்திவைக்க விரும்புகிறது. இம்ரான் கான் எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறக்கூடும் என்று பல கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இப்போது அரசில் இடம்பெற்றுள்ள பல அரசியல் கட்சிகள் இம்ரான் கானின் கட்சிக்கு நேரடியாகத் தடை விதிக்கும்படி கோரி வருகின்றன.



### இம்ரான் கான் எப்படி விடுதலையானார்?

இம்ரான் கானின் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியின் பெயருக்கு நீதிக்கான இயக்கம் என்று பொருள்.

முன்னதாக, பாகிஸ்தான் ராணுவம் குறித்து கேள்வி எழுப்பிய தலைவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பாகிஸ்தான் ராணுவத்தை தாலிபன்களின் ஆதரவாளர் என்று கூறிய நாடாளுமன்ற உறுப்பினர் அலி வசீர் இரண்டு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். சபை நடவடிக்கைகளில் பங்கேற்கக்கூட அவர் அனுமதிக்கப்படவில்லை.

பலூசிஸ்தானில் ஆயிரக்கணக்கான அரசியல் தொண்டர்கள் காணாமல் போயுள்ளனர். பாகிஸ்தானின் எந்த ஒரு முக்கிய அரசியல் கட்சியோ அல்லது எந்த நீதிமன்றமோ அவர்களைப் பற்றி ஒருபோதும் கேள்வி கேட்கவில்லை. யாரும் அதில் ஆர்வம் காட்டவில்லை.

இத்தகைய சூழ்நிலையில், டஜன் கணக்கான கடுமையான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள இம்ரான் கான் எப்படி விடுதலையானார் என்ற கேள்வி எழுகிறது.

ராணுவ அமைப்பையே இம்ரான் கான் பிளவுபடுத்தியுள்ளார் என்பது பொதுவான கருத்து. இம்ரான் கானால் கவரப்பட்ட அதிகாரிகளும் குடும்பங்களும் ராணுவத்தில் உள்ளனர்.

அதன்பிறகு அவரது ஜாமீனை நீட்டிக்கும் நீதித்துறையும் உள்ளது. அவர் ஒரு நாள் சிறையில் இருந்த நிலையில், பாகிஸ்தானின் உச்ச நீதிபதி அவரை நீதிமன்றத்திற்கு அழைத்து, 'உங்களைப் பார்த்ததில் மகிழ்ச்சி" என்று கூறி, அவரை விருந்தினர் மாளிகைக்கு அனுப்ப உத்தரவிட்டார். மறுநாள் மற்றொரு நீதிபதி இம்ரான் கானை விடுதலை செய்தார்.

### இம்ரானின் ஆதரவாளர்கள்

பாகிஸ்தானில் ஊழல் அரசியல்வாதிகள் மற்றும் அரசியலில் ஊழலை வெறுக்கும் ஒரு பெரிய ஆதரவாளர் கூட்டத்தையும் இம்ரான் கான் உருவாக்கியுள்ளார்.



தூய்மையான அரசு மற்றும் நீதி பற்றிய அவரது செய்தி மக்களைக் கவர்ந்து அவரை பிரபலப்படுத்தியுள்ளது.

ஆயினும் இம்ரான் கான் ஆட்சியில் இருந்தபோது, நாட்டில் ஊழல் அதிகரித்தது மற்றும் அவர் பல எதிர்க் கட்சி அரசியல்வாதிகளை சிறைக்கு அனுப்பினார்.

ஆனால் அவர் ஆட்சியில் இருந்து நீக்கப்பட்ட பிறகு அவரது ஆதரவாளர்கள் அவருடன் மிகவும் வலுவாக இணைந்துள்ளனர். இதற்கு முன் வாக்களிக்காத மற்றும் அரசியல் பேரணிகளில் பங்கேற்காத இளைஞர்களும் மகளிரும் இதில் உள்ளனர்.

அவர் அரசியல் ரீதியாக முதிர்ச்சியடையாதவர் என்று இம்ரான் கான் மீது குற்றம்சாட்டப்படுகிறது. தற்போதைய அரசியல் நெருக்கடியின் வரலாற்றுப் பின்னணியை பார்க்காமல், பாகிஸ்தானில் இதற்கு முன் இப்படி நடந்ததில்லை என்று அவர் கூறுவதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

பாகிஸ்தானை ஊழல் தலைவர்களிடமிருந்து விடுவிப்பதை நோக்கமாகக் கொண்ட சீர்திருத்த இயக்கத்தின் ஒரு பகுதியாக அவர் தன்னைக் கருதுகிறார்.

இம்ரான் கானைப் போலவே இவர்களும் ராணுவத்தை முன்னர் நேசித்தனர். ஆனால் இப்போது எல்லாவற்றுக்குமே ராணுவத்தை பொறுப்பாக்குகிறார்கள்.

ராணுவத்தின் மீது இம்ரான் கானின் தொடர்ச்சியான தாக்குதல்கள் இருந்தபோதிலும், அவர் உண்மையில் ராணுவத்தின் அதிகாரங்களைக் குறைக்க விரும்பவில்லை என்று கருதுபவர்கள் பலர் உள்ளனர். முன்பைப் போலவே ராணுவ ஜெனரல்கள் தன்னை நேசிக்க வேண்டும் என்றும் தனக்கும் தனது கட்சிக்கும் ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார் என்று அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

### ராணுவம் இப்போது என்ன நினைக்கிறது

மே 9ம் தேதி நிகழ்வுகளுக்குப் பிறகு, பாகிஸ்தான் ராணுவம், இனி பொறுத்தது போதும் என்று நினைப்பது போலத் தெரிகிறது.

பாகிஸ்தானின் வரலாற்றில் மே 9ம் தேதி ஒரு கருப்பு நாள் என்று பாகிஸ்தான் ராணுவ தளபதி தெரிவித்துள்ளார்.

இம்ரான் கான் பாகிஸ்தானில் ஒரு புதிய வகையான ஜனரஞ்சக அரசியலைத் தொடங்க முயற்சிக்கிறார். ஆனால் பாகிஸ்தான் ராணுவம் அவரை சமாளிக்க அதே புத்தகத்திலிருந்து பாடத்தை எடுக்கிறது. தனக்கு முன்னால் இருந்த தலைவர்களை சமாளிக்க அவர் பயன்படுத்திய அதே பாடம்.

டஜன் கணக்கான ஊழல் வழக்குகள் மற்றும் பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களின் கைதுகள் ஆகியன, ராணுவத்தைத் தாக்கியதன் மூலம் இம்ரான் கான் உண்மையில் சிவப்புக் கோட்டைத் தாண்டிவிட்டார் என்ற தெளிவான செய்தியை அனுப்புகிறது.

பொதுமக்களின் மனதைக் கவரும் வகையில் தியாகிகளின் நினைவாக ஒரு பாடலையும் ராணுவம் வெளியிட்டுள்ளது.


மே 9-ம் தேதி ராணுவ கண்டோன்மெண்டுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ராணுவம் 'தியாகிகளின் மரியாதை தினத்தை' கொண்டாடியது. ஆனால் அன்றைய தினம் பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் யாரும் வீரமரணம் அடையவில்லை என்றும் தளபதிகளின் ஆடம்பரமான பங்களாக்கள் மட்டுமே சூறையாடப்பட்டன என்றும் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

பாகிஸ்தான் நகரங்களின் முக்கிய வீதிகளில் ராணுவத்திற்கு ஆதரவு மற்றும் விசுவாசத்தை வெளிப்படுத்தும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதுவரை தன்னை விமர்சித்து வந்த வேறு அரசியல் கட்சிகளையும் ராணுவம் விளையாட்டின் அங்கமாக்கியுள்ளது. கடந்த வாரம் பாகிஸ்தானில் உள்ள பல சமய அரசியல் கட்சிகளும் ராணுவத்திற்கு ஆதரவாக பேரணிகளை நடத்தின.

பாகிஸ்தான் ராணுவம் தனது அமைப்பிற்கு உள்ளேயும் இம்ரான் கானுக்கு ஆதரவாக உள்ள ராணுவ அதிகாரிகளை தேடி வருகிறது.

# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மனித குலத்தையே பூண்டோடு அழிக்க வல்லதா?




செயற்கை நுண்ணறிவு மனித இனத்தின் அழிவுக்கு வழிவகுக்கும் என ஓப்பன் ஏஐ (OpenAI), கூகுள் டீப்மைண்ட் (புழழபடந னுநநிஅனைெ)-ன் தலைவர்கள் மற்றும் அத்துறையைச் சேர்ந்த வல்லுனர்கள் எச்சரித்துள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு குறித்த பாதுகாப்பு மையத்தின் (Centre for AI Safety) வலைப்பக்கத்தில் வெளியிடப்பட்ட இது போன்ற பதிவுக்கு ஏராளமானோர் ஆதரவு தெரிவித்துள்ளனர் .

“செயற்கை நுண்ணறிவின் காரணமாக மனித குல அழிவிற்கான ஆபத்து ஏற்படுவதைத் தடுக்க, கொரோனா, அணு ஆயுதப் போர் உள்ளிட்டவற்றைத் தடுப்பதற்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை அளிக்க வேண்டும்” என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இது போன்ற அச்சம் மிகைப்படுத்தப்பட்ட ஒன்று என பலர் விமர்சித்துள்ளனர்.

**ChatGPT** என்னும் அரட்டை செயலியை உருவாக்கிய **OpenAI** இன் தலைமை நிர்வாகி சாம் ஆல்ட்மேன், கூகுள் டீப்மைண்ட் (**Google DeepMind**)-ன் தலைமை நிர்வாகி டெமிஸ் ஹஸ்ஸாபிஸ் (**Demis Hassabis**) மற்றும் **Anthropic** நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி டரியோ அமோடி (**Dario Amodei**) ஆகியோர் செயற்கை நுண்ணறிவு குறித்த பாதுகாப்பு மையத்தின் இந்த பதிவை ஆதரித்துள்ளனர்.

செயற்கை நுண்ணறிவினால் என்ன மாதிரியான பேரிடர்கள் ஏற்படும் என்பது குறித்த சில சூழ்நிலைகளை செயற்கை நுண்ணறிவு குறித்த பாதுகாப்பு மையம் வெளியிட்டுள்ளது.

● செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பல மென்பொருட்கள் மற்றும் மிண்அணு கருவிகளை பெரும் ஆயுதங்களாக சமூக விரோத கும்பல்கள் மற்றும் சில நாடுகளின் அரசுகள் பயன்படுத்தலாம்.

● செயற்கை நுண்ணறிவின் துணையுடன் உருவாக்கப்படும் தவறான தகவல்கள், சமூகத்தை சீர்குலைத்து “பலர் ஒன்றிணைந்து முடிவெடுப்பதை எதிர்மறையாக பாதிக்கும்.”

● செயற்கை நுண்ணறிவின் சக்தி, மிகக்குறைவான கைகளில் அதிக அளவில் குவிந்து, உலக அரசுகள் பொது மக்களை தனிப்பட்ட முறையில் கண்காணிக்கத் தொடங்கலாம். அவர்கள் மீது அடக்குமுறையை ஏவவும் உதவும்.

●**Wall-E** திரைப்படத்தில் காட்டப்பட்டது போல், மனிதர்கள் பெரும்பாலும் செயற்கை நுண்ணறிவைச் சார்ந்திருக்கும் நிலைமை ஏற்படும்.

அதிபுத்திசாலித்தனமான செயற்கை நுண்ணறிவின் ஆபத்துகள் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்த டாக்டர் ஜாஃப்ரி ஹிண்டன், செயற்கை நுண்ணறிவு பாதுகாப்புக்கான மையத்தின் அறிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

மாண்ட்ரீல் பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் பேராசிரியரான யோசுவா பெங்கியோவும் இந்த அறிக்கைக்கு ஆதரவளித்துள்ளார்.


டாக்டர் ஜாஃப்ரி ஹிண்டன், பேராசிரியர் யோசுவா பெங்கியோ, மற்றும் நியூயார்க் பல்கலைக்கழக பேராசிரியர் யான் லீகுன் ஆகியோர் செயற்கை நுண்ணறிவுத் துறையில் அவர்களின் அற்புதமான ஆரம்பகட்ட பங்களிப்புக்களுக்காக செயற்கை நுண்ணறிவின் தந்தைகள் என அழைக்கப்படுகின்றனர். அது மட்டுமின்றி அவர்கள் மூவரும் கூட்டாக 2018-ம் ஆண்டின் டூரிங் விருதை வென்றனர். இது கணினி அறிவியலில் ஒருவரின் மிகச் சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கிறது.



ஆனால் மெட்டாவில் பணிபுரியும் பேராசிரியர் **LeCun**, மனித அழிவு குறித்த இந்த எச்சரிக்கைகள் அனைத்தும் மிகைப்படுத்தப்பட்டவைகளாகவே இருக்கின்றன என்ற கருத்தை தமது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்திருக்கிறார்.

**உண்மைகளுக்கு ஊறு விளைவிக்கும் தன்மை**

இதே போல் செயற்கை நுண்ணறிவினால் மனிதகுலத்துக்கு ஆபத்து ஏற்படும் என்பதை பல வல்லுநர்கள் முழுமையாக ஏற்கவில்லை. இது போன்ற அச்சம் நம்பக்கத்தகுந்த வகையில் இல்லை என்கின்றனர் அவர்கள். ஏற்கெனவே நாம் எதிர்கொண்டு வரும் சவால்களை முறியடிப்பதற்கான பாதையிலிருந்து இது போன்ற அச்சங்கள்



நமது கவனத்தை திசைதிருப்புவதாகவும் அவர்கள் கருதுகின்றனர்.

பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞானியான அரவிந்த் நாராயணன், அறிவியல் புனைகதை போன்ற பேரழிவுக் காட்சிகள் உண்மைக்குப் புறம்பானவை என்று பிபிசியிடம் கூறினார்: “தற்போதைய செயற்கை நுண்ணறிவின் திறன்கள், இது போன்ற ஆபத்துகளை ஏற்படுத்துமளவுக்கு பெரிய அளவில் ஆற்றல் பெற்றவையாக இல்லை என்கிறார் அவர். மேலும், இது போன்ற அதீத அச்ச உணர்வுகள் காரணமாக, செயற்கை நுண்ணறிவினால் ஏற்படப் போகும் சிறிய அளவிலான ஆபத்துக்களைப் பற்றி ஆய்வு செய்பவர்களின் கவனம் திசை திருப்பப்படுவதாகவும் அவர் கூறுகிறார்.

ஆக்ஸ்போர்டின் இன்ஸ்டிடியூட் ஃபார் எதிக்ஸின் மூத்த செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சியாளர் எலிசபெத் ரெனிரிஸ், செயற்கை நுண்ணறிவினால் நிகழ்காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்து அதிகம் கவலைப்படுவதாக பிபிசியிடம் தெரிவித்தார்.

“செயற்கை நுண்ணறிவின் முன்னேற்றங்கள், மென்பொருட்களும், கருவிகளும் தாமாகவே முடிவெடுக்கும் அளவைப் பரவலாக்கும். அது பாரபட்சமானதாக, வெறுப்பை ஏற்படுத்தக்கூடியவையாக இருக்கலாம். அதே நேரம் நியாயமற்ற, ஏற்றுக்கொள்ள முடியாத முடிவுகள் எடுக்கப்படும் ஆபத்தும் உள்ளது,” என்று அவர் கூறினார். அவை, “தவறான தகவல்களின் அளவு மற்றும் பரவலில் மிக மோசமான அதிகரிப்புக்கு வழிவகுக்கும். செயற்கை நுண்ணறிவு இதன் மூலம் எதார்த்தத்தை உடைத்து, பொது நம்பிக்கையை சீர்குலைக்கும்.”

பல செயற்கை நுண்ணறிவு கருவிகள், மனிதர்களின் எண்ண ஓட்டங்களை அடிப்படையாகக் கொண்டே முடிவுகளை எடுக்கின்றன. அவற்றின் உள்ளடக்கம், உரைகள், கலை மற்றும் இசைக்கான முன்னுரிமைகள் என அனைத்தும், இக்கருவிகளை பயன்படுத்தி வருபவர்களின் தனிப்பட்ட விருப்பங்களை ஒட்டிய அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. அதனால் அவை செயல்படும் விதமும் அதன் அடிப்படையிலேயே இருக்கும்.

இந்த செயற்கை நுண்ணறிவு என்பது பொதுமக்களின் பெரும் அளவிலான செல்வங்களை சொற்ப எண்ணிக்கையிலான தனியார் நிறுவனங்களுக்கு மாற்றும் செயல்களைச் செய்யவும் பயன்படுகிறது.

ஆனால் செயற்கை நுண்ணறிவு பாதுகாப்பு மையத்தின் இயக்குனர் டான் ஹெண்ட்ரிக்ஸ், தற்காலத்தில் நிலவும் ஆபத்துகள் மற்றும் எதிர்கால அபாயங்களை சம்பந்தமற்ற விஷயங்களாக பாவித்து அணுகக்கூடாது என பிபிசியிடம் பேசிய போது தெரிவித்தார்.

“தற்போதைய சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது, பிற்காலத்தில் ஏற்படும் பல ஆபத்துக்களை எதிர்கொள்ளப் பயனுள்ளதாக இருக்கும்,” என்று அவர் கூறினார்.

**மனிதனை மிஞ்சிய அறிவினால் ஆபத்து**

அடுத்த தலைமுறை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப வளர்ச்சியை உடனடியாகத் தடுத்தது நிறுத்த வேண்டும் என கடந்த மார்ச் மாதம் டெஸ்லா நிறுவனத்தின் தலைவர் எலோன் மஸ்க் உள்ளிட்ட வல்லுநர்கள் கூட்டாக கையெழுத்திட்டு ஒரு திறந்த கடிதத்தை வெளியிட்டதைத் தொடர்ந்து, செயற்கை நுண்ணறிவினால் மனித குலத்துக்கு ஆபத்து என்ற செய்தியின் மீது ஊடகங்கள் அதிக அளவில் தங்கள் கவனத்தைச் செலுத்தத் தொடங்கின.

அந்த கடிதத்தில், “செயற்கையாக உருவாக்கப்படும் மனங்கள் (**non human minds**)ஒரு கட்டத்தில் மனிதர்களை விட திறமை மிக்கவைகளாக மாறி, அதிக எண்ணிக்கையில் பெருகி, மனித இனத்தையே அழித்து விடும் அளவுக்கு பாதிப்புக்கள் ஏற்படும் என எச்சரிக்கப்பட்டிருந்தது.

இதற்கு மாறாக, தற்போதைய பிரச்சாரங்கள் தெளிவான வேண்டுகோளை முன்வைக்கின்றன. அவற்றின் படி, உடனடியாக இந்த ஆபத்துகள் குறித்த ஆலோசனையை அனைவரும் தொடங்கவேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

இந்த அறிக்கை, செயற்கை நுண்ணறிவினால் ஏற்படும் ஆபத்துகளையும், அணு ஆயுதப் போரால் ஏற்படும் அபாயத்துகளையும் ஒப்பிடுகிறது. **OpenAI**, தனத வலைப்பதிவு ஒன்றில், அணு சக்தியைப் பயன்படுத்துவதைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் சர்வதேச அணு சக்தி நிறுவனம் செயல்படுவதைப் போலவே, செயற்கை நுண்ணறிவைக் கட்டுப்படுத்தவும் உலக அளவில் ஒரு கட்டுப்பட்டு அமைப்பை உருவாக்கலாம் என பரிந்துரைத்துள்ளது.

**செயற்கை நுண்ணறிவு பற்றி கூடுதல் கவனம் செலுத்த பிரிட்டன் உறுதி**

சாம் ஆல்ட்மேன் மற்றும் கூகுள் தலைமை நிர்வாகி சுந்தர் பிச்சை இருவரும் அண்மையில் பிரிட்டன் பிரதமருடன் செயற்கை நுண்ணறிவு ஒழுங்குமுறை பற்றி விவாதித்தவர்களில் இடம்பெற்றிருந்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் ரிஷி சூனக், செயற்கை நுண்ணறிவினால் சமூகம் மற்றும் பொருளாதாரத் துறைகளில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து விளக்கினார்.

“முடக்குவாதத்தால் பாதிக்கப்பட்டவர்கள் செயல்பட உதவுவது, நோயெதிர்ப்பு சக்தி மருந்து கண்டுபிடிப்பது போன்ற துறைகளில் செயற்கை நுண்ணறிவின் உதவி




அளப்பரிய அளவில் இருந்தாலும், அதை பாதுகாப்புடன் பயன்படுத்தும் தேவை இருப்பதை மறுக்கமுடியாது,” என்றார் அவர்.

அதனால் தான், கடந்த சில நாட்களுக்கு முன் செயற்கை நுண்ணறிவுத் துறையின் முன்னணி நிறுவனங்களைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் வல்லுனர்களுடன் நான் ஆலோசனை நடத்தினேன். என்ன மாதிரியான பாதுகாப்பு ஏற்பாடுகளை நாம் மேற்கொள்ளவேண்டும் என்பது குறித்தும், செயற்கை நுண்ணறிவினால் ஏற்படும் ஆபத்துகளைத் தடுக்க புதிதாகத் தேவைப்படும் சட்டங்கள் குறித்தும் அப்போது ஆலோசனை நடத்தப்பட்டது.”

“கொரோனா தொற்றுநோய் அல்லது அணு ஆயுதங்களால் விளையும் ஆபத்துகளை செயற்கை நுண்ணறிவும் ஏற்படுத்தும் என்பது உள்ளிட்ட தகவல்கள் பொதுமக்களை மிகுந்த கவலையில் ஆழ்த்தியுள்ளன. அதனால், செயற்கை நுண்ணறிவு குறித்த முடிவுகளை மேற்கொள்ளும் போது, அரசு அதில் மிகுந்த கவனம் செலுத்தும் என நான் உறுதியாக சொல்லிக்கொள்கிறேன்.”

அண்மையில் ஜி7 பொருளாதார கூட்டமைப்பு நாடுகளின் உச்சி மாநாட்டிலும் இது குறித்துப் பேசி உலகத் தலைவர்களின் கவனத்தை ஈர்த்த ரிஷி சூனக், விரைவில் அமெரிக்க அரசிடமும் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசப் போவதாகத் தெரிவித்துள்ளார். ●

# வடிவேல் சுரேஷ், ராஜிதவுக்கு சஜித் தரப்பினர் காலக்கெடு!

கொழும்பு, ஜூன் 02

கட்சி தீர்மானத்துக்கு எதிராக செயற்பட்டமை தொடர்பில் விளக்கமளிக்குமாறு வலியுறுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன மற்றும் வடிவேல் சுரேஷ் ஆகியோருக்கு ஐக்கிய மக்கள் சக்தி கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவராகச் செயற்பட்ட ஜனக ரத்னாயக்கவை அப்பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருந்தது. வாக்கெடுப்பின்போது சபையில் இருக்க வேண்டும் எனவும் எம்.பிக்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

எனினும், கட்சி முடிவுக்கு எதிரான வகையில் இவ்விரு எம்.பிக்களும் செயற்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே இவ்விரு எம்.பிக்களுடனும் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

குறித்த கடிதம் கடந்த 29 ஆம் திகதி எதிரணி பிரதம கொறடாவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(அ)

# இலங்கையில் முதலீடு செய்யுமாறு தாய்லாந்து தொழில் முனைவோருக்குப் பிரதமர் அழைப்பு

பாங்கொக், ஜூன் 02

இலங்கையில் முதலீடு செய்யுமாறு தாய்லாந்தின் வர்த்தகர்கள், தொழில் அதிபர்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையில் முதலீடு செய்யும் போது தமது பொருட்களை விற்பனை செய்வதற்கு வரிச்சலுகைகள் மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் பல சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

பாங்கொக்கில் உள்ள இலங்கை தூதரகத்தில் தாய்லாந்தின் தொழில் கூட்டமைப்பு, தாய்லாந்தின் சுற்றுலா கவுன்சில், தாய்லாந்தின் முதலீட்டுச் சபை, தாய் லாந்தில் உள்ள சர்வதேச வர்த்தக சம்மேளனம் மற்றும் தாய்லாந்தின் வர்த்தக சம்மே ளனம் உள்ளிட்டவற்றின் பங்குபற்றலுடன் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரி வித்தார்.

இலங்கை மற்றும் தாய்லாந்துக்கிடையில் வலுவான மத கலாசார மற்றும் சமூகப் பிணைப்புக்கள் காணப்படுகின்றமையால் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

நிலையான வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்காக உயர்மட்ட வர்த்தகம் செய்யும் முதலீட்டு நட்பு நாடாக இலங்கை மாறுவ தற்கு அரசாங்கம் முன்னுரி மையை வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள பிரதமர், தாய்லாந்தின் முதலீட்டு சமூ கத்தை இந்த திறனைப் பயன்படுத்திக் கொள்ள வரவேற்பதாகவும் கூறினார்.

(அ)

# தாண்டிக்குளம் பகுதியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூன் 02

தாண்டிக்குளம் பகுதியில் 58 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாண்டிக்குளம் - ஒயார்சின்னக்குளம் பகுதியில் வசித்து வந்த பாலசிங்கம் சுரேஸ் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

புதன்கிழமை இரவு உணவருந்திவிட்டு நித்திரைக்குச் சென்ற குடும்பஸ்தர் தவறான முடிவெடுத்து தூக்கில் தொங்கி மரணமடைந்துள்ளார்.

இரவு தூக்கத்தில் இருந்து விழித்த மனைவி, கணவனை நீண்ட நேரம் காணாததால் வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தபோது வீட்டின் முன்புறமாகவுள்ள வேம்ப மரத்தில் தூக்கில் தொங்குவதை அவதானித்துள்ளார்.

பின்னர் அயல் வீட்டாரின் உதவியுடன் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற கிராம சேவையாளர் மற்றும் பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தடயவியல் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# வளிமாசடைதல் தொடர்பான விழிப்புணர்வு சைக்கிள் சவாரி

காரைதீவு, ஜூன் 02

வளிமாசடைதல் மற்றும் அதன் விளைவுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் சைக்கிள் சவாரி களுவாஞ்சிக்குடியில் நேற்று முன் தினம் இடம் பெற்றது.

தேசிய சுற்றாடல் தின கொண்டாட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் ஓரங்கமாக “ பிளாஸ்ரிக் மூலம் ஏற்படக்கூடிய மாசைத் தடுப்போம்” எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படும் சைக்கிள் சவாரி களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் வழிகாட்டுதலில் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகின்றன.

அந்த வகையில் “வளி மாச டைதல் மற்றும் அதன் பாதக மான தாக்கங்களை குறைக்கும் தினம் “என்ற தொனிப் பொரு ளில் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் துவிச்சக் கரவண்டி சவாரி நேற்று முன் தினம் புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் பிரதேச செய லக முன்றலிலிருந்து ஆரம்பித்துவைக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் 100க்கும் மேற்பட்ட அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டதுடன், உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன் மற்றும் கணக்காளர் சா. விக்னராஜா ஆகியோர் கலந்துகொண்டு இந் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

அத்துடன் பல கிராம சேவகர் பிரிவுகளில் மர நடுகை நிகழ்வும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)






# கல்வி, சுற்றுலாத்துறை, சுகாதாரம், காணி விடயங்களில் அதிக கவனம் செலுத்துங்கள்

## முஷாரப் எம்.பி கிழக்கு ஆளுநரிடம் வேண்டுகோள்

திருமலை, ஜூன் 02

**கிழக்கு மாகாணத்தில் கல்வி, சுற்றுலாத்துறை, சுகாதாரம், காணி அபிவிருத்தி போன்ற விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்துமாறு, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களுக்கான அபிவிருத்திக்குழுத் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கேட்டுக்கொண்டார்.**



அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப்பிற்கும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்குமிடையிலான சந்திப்பு திருகோணமலை ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற போது அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாடு மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் இருந்த போது ஜனாதிபதிப் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பல சவால்களை எதிர்கொண்டு நாட்டை மீட்டுவரும் நிலையில், ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களை அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு ஆளுநரின் ஒத்துழைப்பினை எதிர்பார்க்கிறோம்.

சிறுபான்மையினக் கட்சி ஒன்றின் தலைவரான தாங்கள் ஆளுநராக நியமிக்கப்பட்டிருப்பதையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். கிழக்கு மக்களும் இதனை பெரிதும் ஆதரித்துள்ளனர்.

குறிப்பாக, கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் நீண்டகாலமாக தற்காலிக, பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றிவரும் ஊழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

இக்கோரிக்கையை நானும் ஏற்கிறேன். அதற்கான அனுமதி மத்திய அரசாங்கத்தினால் கிடைக்கும்போது அதனை விரைவாகச் செய்வேன். இதற்கான அனுமதி கிடைப்பதற்கு நீங்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்ற வேண்டுகோளை பாராளுமன்ற உறுப்பினரிடம் கிழக்கு மாகாண ஆளுநர் முன்வைத்தார்.

ஆளுநருடனான இச்சந்திப்பில் பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான எம்.எஸ்.முபாரக், அன்வர் சதாத், பாராளுமன்ற உறுப்பினரின் ஊடக இணைப்பாளர் எஸ்.எம். அறூஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

# பெண் தலைமை குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருட்கள் வழங்கல்




அக்கரைப்பற்று, ஜூன் 02

இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் சேவா இன்டர்நஷனல் பவுண்டேசன் அமைப்பின் அனுசரணையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் வாழும் பெண் தலைமை தாங்கும் 73 குடும்பங்களுக்கான உலர் உணவுப்பொருட்கள் வழங்கும் நிகழ்வு நற்பிட்டிமுனை சுமங்கலி மண்டபத்தில் இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் கல்முனை பிரதேச பொறுப்பாளர் ஜே.ஆர். தர்மராஜ் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு கல்முனை பிரதேச செயலக உத்தியோகத்தர் ஏ.அமலதாசன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். (அ)

# மலேரியா நுளம்பு பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை





அக்கரைப்பற்று, ஜூன் 02

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பிரிவுகளில் மலேரியா நுளம்புப் பரவலை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய மலேரியா கட்டுப்பாட்டுப் பிரிவு வைத்தியப் பொறுப்பதிகாரி மருத்துவர் எம்.எம். நௌஷாத் தெரிவித்தார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு மலேரியா நுளம்பு பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள், வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தாதியர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோர் பொதுமக்களுக்கு மலேரியா நோய் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கவேண்டுமென அவர் கோரினார்.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி மருத்துவர் எம்.எப்.ஏ. காதர் கலந்து கொண்டார். (அ)

# தலசீமியா தின விழிப்புணர்வு

மட்டக்களப்பு, ஜூன் 02

சர்வதேச தலசீமியா தின ஊர்வலம் ஹரிதாஸ் ஏகட் நிறுவன தலைவர் அருட்தந்தை ஜே.ஜேசுதாசன் அடிகளாரின் தலைமையில், தலசீமியா செயற்திட்ட இணைப்பாளர் ஆர்.கே மேரி ஒழுங்கமைப்பில் மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் ஆலோசனையின் கீழ் மாவட்டத்தில் அண்மைக் காலமாக தொற்றா நோய்களில் ஒன்றான தலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இந் நோய்யை கட்டுப்படுத்தும் நோக்கோடு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக "தலசீமியா நோய் பற்றி அறிந்து கொள்வோம், பகிர்ந்து கொள்வோம், நோயாளிகள் மீது அக்கறை கொள்வோம்" எனும் தொனிப்பொருளில் இந்த ஊர்வலம் காந்தி பூங்காவில் இருந்து ஆரம்பமாகி சாள்ஸ் மண்டபத்தை அடைந்தது. (அ)



# சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தின விழிப்புணர்வூட்டல் செயலமர்வு

மட்டக்களப்பு, ஜூன் 02

சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தினத்தையொட்டி மருத்துவ பரிசோதனை மற்றும் விழிப்புணர்வூட்டல் செயலமர்வும் மட்டக்களப்பு - ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

நகர சபையின் செயலாளரும் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தருமான எம்.எச்.எம். ஹமீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வைத்தியர்கள் தாதியர்கள் மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

நகர சபையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் இலவசமாக மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டதுடன் விழிப்புணர்வுச் செயலமர்வொன்றும் நடத்தப்பட்டது.

நகர சபையின் ஊழியர்கள் இந்த நிகழ்வில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

புகையிலைப்பாவனை மற்றும் புகைத்தல் போன்ற செயற்பாடுகளினால் உடற் சுகாதாரம் பாதிக்கப்படுவதுடன் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் இங்கு சுட்டிக்காட்டினர். (அ)



# உக்ரைனின் கடைசிப் போர்க் கப்பல் ரஷ்ய விமானப் படைகளால் அழிப்பு!

மொஸ்கோ, ஜூன் 02

**உக்ரைனின் கடைசி போர்க்கப்பலை அழித்ததாக ரஷ்யா தெரிவித்துள்ளது.**

**யூரி ஒலெபிரென்கோ என்ற போர்க்கப்பல் ரஷ்ய விமானப் படைகளால் அழிக்கப்பட்டதாக் கூறப்படுகிறது.**

இது ஒடெசா துறைமுகத்தில் தரித்து நின்ற உக்ரைனிய கடற்படையின் கடைசி போர்க்கப்பலாகும்.

ஒடெசா மிகப்பெரிய உக்ரேனிய துறைமுகமாகும். கருங்கடல் படுகையில் உள்ள மிகப்பெரிய துறைமுகங்களில் ஒன்றாகும்.

“மே 29 அன்று, ஒடெசா துறைமுகத்தில் தரித்து நின்ற உக்ரைனிய கடற்படையின் கடைசி போர்க்கப்பலான ‘யூரி ஒலெபிரென்கோ’, ரஷ்ய விமானப்படையின் உயர் துல்லியமான தாக்குதல் அழிக்கப்பட்டது” என்று ரஷ்ய இராணுவம் தனது தினசரி மாநாட்டில் தெரிவித்துள்ளது.

1970 களில் முதன்முதலில் இயக்கப்பட்ட சோவியத் கால கடற்படைக் கப்பல் இது. ரஷ்யாவின் தாக்குதல் தகவல் தொடர்பில் உக்ரைன் எதிர்வினையாற்றவில்லை.

கிழக்கு உக்ரைனில் டான்பாஸில் 2014 இல் தொடங்கிய



நடந்த போரில் இறந்த உக்ரைனிய கடற்படையின் நினைவாக இந்த கப்பல் பெயரிடப்பட்டது. ரஷ்யாவின் ஆதரவுடன் பிரிவினைவாதிகள் பிராந்தியத்தில் உள்ள அரசாங்க கட்டடங்களை கைப்பற்றியபோது இந்த மோதல் வெடித்தது.

முன்னதாக கடந்த திங்கள் என்று, ரஷ்யா நடத்திய கடுமையான வான்வழித் தாக்குதல்களால் ஒடெசா துறைமுகத்தில் உள்கட்டமைப்பு சேதமடைந்ததாக உக்ரைன் அறிவித்தது.

ஒடேசா துறைமுகம் ஒரு முக்கிய தானிய ஏற்றுமதி மையமாகும். ஐ.நா, துருக்கி மத்தியஸ்தத்தில் ஏற்படுத்தப்பட்ட தானிய ஒப்பந்தத்தின்படி, தானிய ஏற்றுமதியின் முக்கிய அங்கமாக ஒடெசா துறைமுகமே உள்ளது.

ஒடெசா துறைமுகம் ஒரு கடற்படை தளத்தையும் கொண்டுள்ளது. (அ)

# போர் நிறுத்தத்தில் இருந்து விலகும் சூடான் இராணுவம்!



கார்ட்டும், ஜூன் 02

சூடானின் இராணுவம் போர் நிறுத்தம் மற்றும் மனிதாபிமான அணுகல் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதை நிறுத்தி வைத்துள்ளது.

மே மாத தொடக்கத்தில் சவூதி அரேபிய துறைமுக நகரமான ஜெட்டாவில் இராணுவத்துக்கும், துணை ராணுவ விரைவு ஆதரவுப் படைகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட இரண்டு குறுகிய கால போர்நிறுத்த ஒப்பந்தங்கள் மீண்டும் மீண்டும் மீறப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை காலாவதியாகவிருந்த ஒரு வாரகால போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஐந்து நாட்களுக்கு நீடிக்க இராணுவமும் துணை ராணுவ விரைவு ஆதரவுப் படைகளும் ஒப்புக் கொண்டிருந்தன.

இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர், பிரிகேடியர் நபில் அப்தல்லா, ஏ.பி செய்தி நிறுவனத்திடம், துணை ராணுவ விரைவு ஆதரவுப் படைகள் மனிதாபிமான போர்நிறுத்தத்தை தொடர்ந்து மீறி தலைநகர் கார்ட்டூமில் மருத்துவமனைகள் மற்றும் பிற குடிமக்கள் உள்கட்டமைப்புகளைத் தொடர்ந்து ஆக்கிரமித்ததால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறினார்.

இராணுவம் முந்தைய போர் நிறுத்த ஒப்பந்தங்களை மீறியதாக துணை ராணுவ விரைவு ஆதரவுப் படை குற்றஞ்சாட்டியுள்ளது. (அ)

# இராணுவ உதவிகளை உக்ரைனுக்கு மீண்டும் வழங்கியுள்ள அமெரிக்கா!

நியூயோர்க், ஜூன் 02

உக்ரைனுக்கு சுமார் 300 மில்லியன் டொலர் மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்கவுள்ளதாக அமெரிக்கா மீண்டும் அறிவித்துள்ளது.



அதில் ஏவுகணை லோஞ்சர்கள், பீரங்கிக்கான வெடிமருந்துகள் ஆகியவையும் உள்ளடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யுக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி போர் தொடுத்தது.

இந்தப் போர் தொடங்கி ஓராண்டையும் கடந்துள்ளது.

போரினால் பாதிப்பு அடைந்துள்ள உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆயுதங்கள், தளபாட உதவிகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உலக பணக்காரர்கள் பட்டியலில் எலான் மஸ்க் மீண்டும் முதலிடம்

நியூயோர்க், ஜூன் 02

உலக பணக்காரர்கள் பட்டியலில் எலான் மஸ்க் மீண்டும் முதலிடத்திற்கு முன்னெறியுள்ளார்.

இந்த பட்டியலில் இதுவரை முன்னிலையிருந்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 74 வயதான பேர்னட் ஆர்னோல்ட் என்பவர்.

பேர்னட் ஆர்னோல்ட் மற்றும் எலான் மஸ்க் இடையே அவ்வப்போது போட்டித்தன்மை நிலவி வந்துள்ளது.

இந்நிலையில், எலான் மஸ்க் மீண்டும் உலக பணக்காரர்கள் பட்டியலில் முன்னிலை பெற்றுள்ளார்.

தற்போதைய கணக்கீட்டின் படி எலான் மஸ்க்கின் நிகர சொத்து மதிப்பு 192 பில்லியன் அமெரிக்க டொலராகவும் பேர்னட் ஆர்னோல்ட்டின் நிகர சொத்து மதிப்பு 187 பில்லியன் அமெரிக்க டொலராகவும் காணப்படுகின்றது.



பேர்னட்டின் எல்.வி.எம்.எச் நிறுவனத்தின் பங்குகளின் சரிவு ஏற்பட்டதை அடுத்து இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உலக பணக்காரர்கள் பட்டியலில் முதல் 500 பேரின் பெயர்களை புளூம்பேர்க் வெளியிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# தூக்கமின்மையால் பாதிக்கப்பட்டுள்ள வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்

பியொங்யாங், ஜூன் 02

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தூக்கமின்மை நோயினால் அவதிப்படுவதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மது மற்றும் புகைபிடிக்கும் பழக்கம் அவரது இந்த நிலைமைக்கு காரணமாக இருக்கலாம் எனவும் சர்வதேச ஊடகங்கள் கூறியுள்ளன.

வட கொரிய அதிகாரிகள் தூக்கமின்மை தொடர்பான வெளிநாட்டு மருத்துவத் தகவல்களை, குறிப்பாக சோல்பிடெம் போன்ற மருந்துகளைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர் என தென் கொரியாவின் தேசிய புலனாய்வுச் சேவையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் விவரங்களை தென் கொரிய பாராளுமன்ற புலனாய்வுக் குழுவின் செயலாளர் யோ சாங்-பம் ஊடகங்களுக்கு வழங்கியுள்ளார்.

தூக்கமின்மை வடகொரியாவை ஆட்டிப்படைக்கிறது. அந்த பிரச்னையில் அங்குள்ள பெரிய தலைவரும் தவிப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

மேலும், அதன் சிகிச்சை மற்றும் மருந்து விவரங்கள் குறித்தும், வெளிநாட்டு மருத்துவ முறைகள் குறித்தும் அங்குள்ள அதிகாரிகள் விசாரித்து வருவதாகவும் தெரியவந்துள்ளது.

இதனிடையே அண்மையில்



வெளியான கிம் ஜோங் உன்னின் சில புகைப்படங்களை செயற்கை நுண்ணறிவு மூலம் ஆய்வு செய்துள்ளோம்.

அவர் மீண்டும் உடல் எடையை அதிகரித்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. இவை தவிர மார்ல்பரோ, டன்ஹில் போன்ற வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் மதுவுடன் சேர்த்து சாப்பிடும் தின் பண்டங்களை வடகொரியா அதிகளவில் இறக்குமதி செய்து வருவதாக தெரிய வந்துள்ளது.

அதிகளவான மது மற்றும் புகைப்பழக்கத்தால் கிம்மின் உடல்நிலை மோசமடைந்து வருவதாக தெரிகிறது. அவரது எடை சுமார் 140 கிலோ கிராம் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனை தவிர தூக்கமின்மை அவரைத் தொந்தரவு செய்கிறது என்பது தெளிவாகிறது.

கடந்த மே 16 ஆம் திகதி, அவர் ஒரு நிகழ்ச்சிக்கு சென்றிருந்தபோது, அவர் கண்களுக்குக் கீழே கருவளையங்கள் தெளிவாகத் தெரிந்தன. மேலும், அவருக்காக சோல்பிடெம் போன்ற மருந்துகளும் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் யோ சாங்-பம் கூறியுள்ளார்.

இதனிடையே வடகொரியாவில் நிலவும் உணவுப் பற்றாக்குறையால் உணவுத் தானியங்களின் விலை கடுமையாக அதிகரித்துள்ளன.

கிம் ஆட்சிக்கு வந்த பின்னர் நிலைமை மோசமாகி வருவதாக தென்கொரிய தேசிய புலனாய்வுச் சேவையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

ஈழநாடு





# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் சிட்சிபாஸ் 3ஆவது சுற்றில்!

பாரிஸ், ஜூன் 02

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸில் சிட்சிபாஸ் 6-3, 7-6 (7-4), 6-2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கிராண்ட் ஸ்லாம் தொடர்களில் ஒன்றான பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ், பாரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு 2ஆவது சுற்று ஆட்டத்தில் 5ஆம் நிலை வீரரான கிரீஸ் நாட்டின் ஸ்டெபனோஸ் சிட்சிபாஸ், ஸ்பெயினின் ராபர்டோ கோர்பல்ஸூடன் மோதினார்.

இதில், சிட்சிபாஸ் 6-3, 7-6 (7-4), 6-2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். மற்ற ஆட்டங்களில் இத்தாலியின் பேபியோ போக்னி 6-4, 7-6 (7-5), 6-2 என்ற செற் கணக்கில் அவுஸ்திரேலியாவின் சன் ஹூப்லரையும், ஆஸ்திரியாவின் செபஸ்ரியன் ஒப்னர் 6-3, 7-6 (7-1), 6-4 என்ற செற் கணக்கில் அமெரிக்காவின் செபஸ்ரியன் கோர்டாவையும் வீழ்த்தினர்.

# ஜடேஜா, ஷூப்மன் கில் இந்திய அணியுடன் இணைவு

லண்டன், ஜூன் 02

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான இந்திய அணியில் ஜடேஜா, ஷூப்மன் கில் இணைந்த னர்.

சர்வதேச சார்பில் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் நடத்தப்படுகிறது. இதன் இரண்டாவது தொடர் இறுதியாட்டம் இங்கிலாந்தின் லண்டன், கென்னிங்டன் ஓவல் மைதானத்தில் ஜூன் 7/11ல் நடக்கவுள்ளது. இதில், இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் மோதவுள்ளன.

ஐ. பி. எல். தொடரின் இறுதியாட்டத்தில் பங்கேற்றிருந்த சென்னை அணிக்காக விளையாடிய ஜடேஜா, ரகானே, குஜராத் அணிக்காக ஆடிய ஷூப்மன் கில், முகமது ஷமி, விக்கெட் காப்பாளர் பரத் ஆகியோர் இங்கிலாந்து சென்று அணியில் விளையாடினர்.

பயிற்சி ஆட்டத்தில் விளையாடாமல் இந்திய அணியினர் இந்தத் தொடரில் பங்கேற்கவுள்ளனர். (ஐ)



# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் சபலெங்கா அடுத்த சுற்றில்

பாரிஸ், ஜூன் 02

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸில் 2ஆம் நிலை வீராங்கனையான அரினா சபலெங்கா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட் ஸ்லாம் தொடர்களில் ஒன்றான பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ், பாரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

இதில், மகளிர் ஒற்றையர் பிரிவு 2-வது சுற்றில் 3ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, இத்தாலியின் கமிலாவை எதிர்த்து விளையாடினார். இதில் ஜெசிகா பெகுலா முதல் செற்றை 6-2 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் காயம் காரணமாக கமிலா வெளியேறினார். இதனால் ஜெசிகா பெகுலா 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

5ஆம் நிலை வீராங்கனையான பிரான்ஸின் கரோலின் கார்சியா 6-4, 3-6, 5-7 என்ற செற் கணக்கில் ரஷ்யாவின் அனா பிளின்கோவாவிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். 2ஆம் நிலை வீராங்கனையான அரினா சபலெங்கா 7-5, 2-6 என்ற செற் கணக்கில் 214ஆம் நிலை வீராங்கனையான பெல்லாரசின் இரினா ஷைமனோவிச்சை தோற்கடித்து 3ஆவது சுற்றில் நுழைந்தார்.

9ஆம் நிலை வீராங்கனையான தரியா கஸட்கினா 6-3, 6-4 என்ற செற் கணக்கில் செக் குடியரசின் மார்கெட்டா வோண்ட்ரூசோவா வை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.




# 'செல்பி' கேட்ட ரசிகரையே திருமணம் செய்யும் முகுருஜா!



பாரிஸ், ஜூன் 02

ரென்னிஸ் வீராங்கனை முகுருஜா, ரசிகரை திருமணம் செய்து கொள்ளவுள்ளார்.

ஸ்பெயின் ரென்னிஸ் வீராங்கனை முகுருஜா (வயது 29) பிரெஞ்ச் ஓப்பன் (2016), விம்பிள்டன் (2017) என இரு கிராண்ட்ஸ்லாம் கிண்ணங்களை வென்றுள்ளார்.

இவர், தன்னிடம் 'செல்பி' எடுக்க அனுமதி கேட்ட ரசிகர் ஆர்தர் போர்கசை அடுத்த ஆண்டு திருமணம் செய்யவுள்ளார். சமீபத்தில் இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்துள்ளது.

இதுகுறித்து முகுருஜா கூறுகையில்,

கடந்த 2021இல் அமெரிக்க ஓப்பன் தொடருக்காக நியூயோர்க் மைதானத்துக்கு அருகில் ஹோட்டலில் தங்கி இருந்தேன். சிறிது தூரம் நடந்து விட்டு வரலாம் என முடிவு செய்தேன். தெருவில் இறங்கி ஓடினேன். எனக்கு முன்னால் சென்ற ஆர்தர், திடீரென திரும்பி, 'அமெரிக்க ஓப்பனில் சிறப்பாக செயல்பட வாழ்த்துகள்,' என்றார். பின், 'உங்களுடன் செல்பி எடுத்துக் கொள்ளலாமா,' என கேட்டார். மிக அழகாக உள்ளாரே என நினைத்துக் கொண்டேன்.

இதுதான் எங்களது முதல் சந்திப்பு. இதன் பின் அடுத்தடுத்து பலமுறை சந்திப்பு நடந்தன. முதன் முதலாக அவர், என்னிடம் காதலை சொன்னபோது அழுதேன். கண்ணீருக்கு இடையில் சம்மதம் தெரிவித்தேன். இது அழகான தருணம் - என்று கூறியுள்ளார். (ஐ)




# ஆசியக் கிண்ண தொடரை நடத்த தயாராகும் இலங்கை

புதுடில்லி, ஜூன் 02

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடரை இலங்கையில் நடத்த ஏற்பாடுகள் நடக்கின்றன.

ஆசிய கிரிக்கெட் சபை சார்பில் வரும் செப்ரெம்பர் 2/17இல் ஆசியக் கிண்ணத் தொடரின் 16ஆவது தொடர் (ஒருநாள் ) பாகிஸ்தானில் நடக்கவுள்ளது. ஆனால், 2008 மும்பை பயங்கரவாத தாக்குதலுக்கு பின், இந்திய அணி இதுவரை பாகிஸ்தான் செல்லவில்லை. இந்த முறையும் இந்திய அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் பாகிஸ்தான் செல்ல முடியாது என இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்து விட்டது.

இதனால் இந்திய அணி பங்கேற்கும் போட்டிகளை மட்டும் பொதுவான இடத்தில் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஆலோசனை தெரிவித்தது. இதில் நேரடி ஒளிபரப்பு, பயண நேரம் உட்பட பல்வேறு சிக்கல் இருப்பதால் இந்தியா ஏற்க மறுத்தது. தற்போது இந்தத் தொடரை நடத்தத் தயாராக இருக்குமாறு இலங்கை கிரிக்கெட் சபையிடம் கேட்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை இதுகுறித்து கூறுகையில்,' ஆசியக் கிண்ண விடயத்தில் நாங்கள் இந்தியாவுடன் உள்ளோம். இந்தத் தொடரை நடத்தத் தயாராக உள்ளோம்," - என்றார். (ஐ)

# இலங்கையுடனான தொடர் விலகினார் ரஷித் கான்

காபூல், ஜூன் 02

இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டிகளில் இருந்து ஆப்கானிஸ்தான் பந்துவீச்சாளர் ரஷித் கான் விலகியுள்ளார்.

ஐ. பி. எல். தொடர் முடிவடைந்து வெளிநாட்டு வீரர்கள் அவரவர் நாடுகளுக்கு திரும்பிய நிலையில், பல்வேறு சர்வதேச போட்டிகள் தொடங்கவுள்ளன.

இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் ஆப்கானிஸ்தான் அணி இன்று முதல் ஒருநாள் தொடர்களில் பங்கேற்கவுள்ளன. மொத்தம் மூன்று ஒருநாள் தொடர்களில் பங்கேற்கும் ஆப்கானிஸ்தான் அணி, தொடர்ந்து பங்களாதேஷூக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்நிலையில், முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக ஆப்கானிஸ்தான் அணியின் முன்னணி பந்துவீச்சாளர் ரஷித் கான், முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளிலிருந்து விலகியுள்ளார். கடைசி ஒருநாள் போட்டியில் பங்கேற்பார் என்றும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஐ. பி. எல். தொடரில் குஜராத் ரைட்டன்ஸ் அணிக்காக விளையாடிய ரஷித் கான், மொத்தம் 27 விக்கெட்களை வீழ்த்தி முதல் 3 பந்துவீச்சாளர்களின் பட்டியலில் இடம்பிடித்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# தேர்தலுக்கு நிதியைக் கோரி நீதிமன்றம் செல்லும் ஜே.வி.பி.

## உயர்நீதிமன்றத்தில் விரைவில் வழக்கு

கொழும்பு, ஜுன் 02

**நாட்டில் பணமில்லை என்பதால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதியை ஒதுக்க முடியாது எனக் கூறி தாக்கல் செய்யப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் தற்போது செல்லுப்படியாகாது என்பதால் உடனடியாக தேர்தலுக்கு நிதியை ஒதுக்கத் தேவையான பின்னணியை உருவாக்குமாறு கோரி தேசிய மக்கள் சக்தி உயர்நீதிமன்றதில் வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடிக்கு பாதிப்புகளை ஏற்படுத்திய விடயங்கள் தற்போது மாறியுள்ளதால், நிதி ஒதுக்கீடு தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தில் தேர்தல் ஆணைக்குழுவை உள்ளடக்க முடியாது.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேவையான வகையில் தேர்தல் நடத்துவதைத் தவிர்க்க முடியாது.

உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கான நிதியை தற்போது ஒதுக்கவேண்டும்.

அந்நிய செலாவணி கையிருப்பும் இலங்கை ரூபாவும் வலுவாக இருப்பதாகக் கூறுவார்கள் எனில் உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டும்.

தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி தேசிய மக்கள் சக்தி எதிர் வரும் 8 ஆம் திகதியில் இருந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தும்.

தேர்தலை நடத்துவதற்காக தேசிய மக்கள் சக்தி ஏற்கனவே இரண்டு வழக்குகளை தாக்கல் செய்துள்ளது.

அந்த வழக்குகளின் தீர்ப்புகள் வரும் வரை காத்திருக்கிறோம் -என்றார். (அ)

# ஓட்டோ கட்டணம் குறையாது

கொழும்பு, ஜுன் 02

பெற்றோல் விலை குறைக்கப்பட்டாலும் ஓட்டோ கட்டணம் குறைக்கப்பட மாட்டாது என ஓட்டோ சங்கங்கங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், டீசல் விலையில் திருத்தம் செய்யப்படாமையால் பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட மாட்டாதென அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் எரிபொருட்களின் விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய, ஒக்ரேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அதன் புதிய விலை 318 ரூபாவாகும்.

ஒக்ரேன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 385 ரூபாவாகும்.

லங்கா சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 340 ரூபாவாக அமைந்துள்ளது.

மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 50 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது

அதற்கமைய மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் புதிய விலை 245 ரூபாவாகும். (அ)

# தேவையற்ற இடங்களில் கடமை செய்யும் பொலிஸாரை மீள அழைக்க பணிப்புரை

கொழும்பு, ஜுன் 02

அநாவசியமான நபர்கள் மற்றும் இடங்களில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸாரை, உடனடியாக மீள பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்குமாறு பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

5 ஆயிரத்து 400 பொலிஸார் இதுபோன்ற முறையில் அநாவசியமான நபர்களுக்கும் அநாவசியமான இடங்களிலும்



பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து இந்த நபர்களுக்கும், இடங்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கவேண்டுமா என்பதை, பொலிஸ்மா அதிபர் ஆராய்ந்து மதிப்பிடுகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் அமைச்சர் பணித்துள்ளார். (அ)

# இந்த மாத இறுதிக்குள் மின்சார சபை சீரமைப்பு

கொழும்பு, ஜுன் 02

இலங்கை மின்சார சபையின் சொத்துகள், பொறுப்புகளை செய்வதற்கான திட்டமொன்றை இம்மாத இறுதிக்குள் அறிமுகப் படுத்த எதிர்பார்த்துள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்சார சபையின் சொத்துகள், பொறுப்புகளை மறுசீரமைப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி மற்றும் மின்சார சபை ஆகியவற்றுக்கிடையே நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கமைய உலக வங்கியின் நிபுணர்கள், மின்சார சபை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து கலந்தாலோசித்து தற்போதுள்ள திட்டங்களுக்கான கடன்களை, செலுத்தவேண்டிய தொகைகளை மறுசீரமைப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்சார சபையின் மீளமைப்பைப் பெறக்கூடிய அபிவிருத்திகள், சுயாதீன மின் விநியோகஸ்தர்கள், ஏனைய விநியோகஸ்தர்கள், அரச வங்கிகளிடமிருந்து



பெற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாட்டு மூலதனக் கடன்கள், பிற கடன்கள், 2023 ஆம் ஆண்டுக்கான இழப்புகளை மீட்டல் மற்றும் மின்சார சபையின் வணிகத்திட்டங்கள் என்பன பொது இணக்கப்பாட்டுக்கமைய மறுசீரமைப்பு செய்யப்படும்-என்றார். (அ)

# தொற்றா நோய்கள் பரவல் அதிகரிப்பு!

## உணவுகளில் அவதானம் தேவை

கொழும்பு, ஜுன் 02

நாட்டில் தொற்றா நோய்களின் பரவல் அதிகரிப்புக் காரணமாக சர்க்கரை, உப்பு, கொழுப்பு உணவுகளை உட்கொள்வதில் அவதானம் தேவையென சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பெற்றோர் தமது குழந்தைகளின் போஷாக்கு குறித்து அக்கறை கொள்ளவேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

குறிப்பாக சந்தையில் விற்கப்படும் குளிர்பானங்கள் ஆபத்தை விளைவிக்கலாமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் போஷாக்குப் பிரிவு பணிப்பாளரும் விசேட வைத்திய நிபுணருமான லக்மினி நயனா மகோத ரத்ன ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள்போல உணவு வகைகளைப் பிரித்துக்கொள்ளவேண்டும். பச்சை சிறந்த தெரிவாகவும் மஞ்சள் அவதானத் தெரிவாகவும் சிவப்பு கட்டுப்பாட்டுத் தெரிவாகவும் கொள்ளவேண்டும்.

பச்சை வகை உணவுகள் ஊட்டச்சத்துகளின் ஆதாரங்கள். மஞ்சள் உணவு, பானங்களைத் தெரிவு செய்யும்போது அவதானம் தேவை. அத்துடன் சிவப்பு நிற உணவு, பானங்கள் அவசியமற்றவை. அவற்றைக் கட்டுப்பாட்டுடன் பெற்றுக்கொள்ள வேண்டும்.

நாட்டில் பல பாகங்களிலும் தொற்றா நோய்கள் பரவுகின்றமையால் சர்க்கரை, கொழுப்பு, உப்பு உணவுகளில் மிகுந்த அவதானம் தேவை. சிறுவர்கள், இளைஞர்கள் கட்டுப்பாட்டுடன் உணவு வகைகளை உண்ணவேண்டியது அவசியம்-என்றார். (அ)

### 50 இலட்சம் ரூபா கொள்ளை;

# 19 வயதான யுவதி உட்பட 2 பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜுன் 02

50 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை கொள்ளையிட்டதாக கூறப்படும் இரண்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவிசாவளை நகரில் உள்ள வங்கி ஒன்றில் வைப்புச் செய்வதற்காக கொண்டு சென்ற பணமே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக ருவன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதான யுவதியும் புத்தல பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதான நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

38 வயதான சந்தேக நபர் கொள்ளையிடப்பட்ட பணத்துக்குரிய நிறுவனத்தில் சாரதியாக தொழில் புரிந்து வந்துள்ளார்.

வேறு ஒருவருடன் பணத்தை வங்கியில் வைப்புச் செய்யச் செல்லும்போதே பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

19 வயதான யுவதி கொள்ளைச் சம்பவத்துக்கு உதவிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 27 லட்சம் ரூபா பணம், நான்கு காசோலைகள் மற்றும் சில பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (அ)

# சட்டமூலங்களை ஆராய்வதற்கு எதிர்க்கட்சியால் குழு நியமனம்

கொழும்பு, ஜுன் 02

ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலம் உள்ளிட்ட அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள சட்டமூலங்களை ஆராய பேராசிரியர் சரித்த ஹேரத் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு எதிர்க்கட்சி தரப்பினரால் நியமிக்கப்பட்டுள்ளது.

இதன் உறுப்பினர்களாக இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், கயந்த கருணாதிலக்க, ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சட்டமூலம் தொடர்பில், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துகளை இந்த குழு சேகரிக்க ஆரம்பித்துள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும், ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலம் தொடர்பான எதிர்க்கட்சி கூட்டணியின் நிலைப்பாடு அறிவிக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மிதக்கும் சூரியசக்தி திட்டத்துக்கு கொரியா 5.2 மில்லியன் டொலர்!

கொழும்பு, ஜுன் 02

இலங்கையின் முதலாவது மிதக்கும் சூரிய சக்தி திட்டத்துக்கு கொரிய அரசாங்கம் 5.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தில் சந்திரிகா ஏரி மற்றும் ஊவா மாகாணத்தின் கிரிப்பன் குளம் ஆகியவற்றில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த இரண்டு திட்டங்களும் கொரிய பொறியியல் நிறுவனத்தின் ஊடாக நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

அந்த திட்டங்களுக்கான ஒப்பந்தத்தில் கொரியா தொழில்நுட்ப மேம்பாட்டு நிறுவனமும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சும் நேற்று கைச்சாத்திட்டதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது




ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2024 டிசெம்பர் மாதத்துக்குள் இத் திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் கூறியுள்ளார்.

## 2048இல் அபிவிருந்தியடைந்த...

நான்கு முக்கிய தூண்களில் நாட்டை கட்டியெழுப்புவோம். அடுத்த 5 ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக ஸ்திரப்படுத்தி, அடுத்த 25 ஆண்டுகளில் உயர் வருமானம் ஈட்டும் அபிவிருத்தி அடைந்த நாடாக இலங்கையை மாற்றுவோம். நாட்டை கட்டியெழுப்பும் பணியில் இளைஞர் சமூகம் மீது பெரும்நம்பிக்கை வைத்திருக்கிறோம். துரித பொருளாதார மறுசீரமைப்பு செயல்பாட்டில் அரச - தனியார் துறை ஒத்துழைப்பை அதிகரிக்க கூட்டாய்வு முறையை அமுல்படுத்துவோம். மோசடியை ஒழிக்க விசேட செயலணி உருவாக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

'தேசிய நிலைமாற்றத்துக்கான திட்ட வரைபடம்' என்ற திட்டத்தை முன்னிறுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்த உரையின் முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

நவீன உலகுக்கும், நவீன தொழில்நுட்பத்துக்கும் ஏற்றவாறு நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்காவிட்டால் நாடு பின்நோக்கி செல்லும். அதன் முடிவாக நாடு பொருளாதார காலனித்துவமாக மாறிவிடும். எனவே, நாம் புதிதாக சிந்தித்து புதிய பயணத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதோடு, அதற்கு அவசியமான துரித பொருளாதார மறுசீரமைப்புக்களை செயல்படுத்த வேண்டும்.

ஒழுங்குபடுத்தல், கொள்முதல் மற்றும் அரசியல் ஆகிய அனைத்து அம்சங்களிலும் ஊழலை முற்றிலுமாக நிறுத்துவதற்கும், டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் பொறுப்புணர்வை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க பொறிமுறையின் மூலம் ஊழலுக்கு எதிரான நடைமுறைகளை செயல்படுத்தவும் ஒரு விசேட செயலணி நிறுவப்படும்.

மறுசீரமைப்பு வேலைத்திட்டம், இலகுவான பணி இல்லை. என்றாலும், நாட்டுக்கு சிறந்த விடயங்களை மேற்கொள்ள அரசாங்கம் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது. நாம் எடுக்கும் தீர்மானங்கள் எவ்வளவு கடினமான மற்றும் வேதனையானதாக இருந்தாலும், எதிர்கால சந்ததியினருக்காக அந்தக் கடினமான பாதையில் சரியான கொள்கைகளின்படி முன்னேறுவதன் மூலம் மாத்திரமே நாட்டை மீண்டும் உயர்வடையச் செய்ய முடியும்.

கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் ஓர் இலக்குடன் சரியான பாதையில் செல்வதன் விளைவுகளை இன்று நாம் அனைவரும் அனுபவிக்கிறோம். 70வீதம் வரை உயர்ந்திருந்த பணவீக்கத்தை தற்போது 25.2 வீதம் வரை குறைக்க முடிந்துள்ளது. இதனால் வாழ்க்கைச் சுமை படிப்படியாகக் குறைந்து வருவதோடு, ஒட்டுமொத்த சமூகமும் இந்த பயனை உணர ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவித்த ஜனாதிபதி, நாட்டை முன்னேற்ற முன்னெடுக்கும் சந்தர்ப்பங்களில் நாட்டை விற்கிறார்கள் என்று கோஷமிட்டு இதனை சிலர் குழப்ப முயல்கின்றனர். முன்னரும் இவ்வாறு தான் நடந்தது. இனி, இது போன்ற கோஷங்களுக்கு நீங்கள் ஏமாற மாட்டீர்கள் என்று எங்களுக்கு தெரியும். நாட்டை முன்னேற்ற நாம் அனைவரும் கடுமையாக உழைத்து, நம்மை அர்ப்பணிக்க வேண்டியுள்ளது. 2048 ஆம் ஆண்டுக்குள் உலகில் வளர்ச்சியடைந்த நாடாக மாற வேண்டும் என்ற நமது இலக்கை அடைய வேண்டும் - என்றார்.

மேலும், நவீன உலகத்துக்கும், நவீன தொழில்நுட்பத்துக்கும் ஏற்றவாறு நமது பொருளாதாரத்தை வடிவமைக்காவிட்டால், பின்னோக்கிச் செல்ல வேண்டி ஏற்படும். இத்தகைய விலகலின் விளைவு, நாடு பொருளாதார காலனித்துவமாக மாறுவதுதான்.

தவறான கொள்கைகள், பலவீனமான நிகழ்ச்சிகள், தோல்வியடைந்த வேலைத்திட்டங்கள் ஆகியவற்றை ஓர் ஒழுங்கான பாதையில் முன்னெடுப்பதையே பொருளாதார மறுசீரமைப்புகள் மூலம் நாம் மேற்கொள்கிறோம். பழைய பாரம்பரிய முறைகள் மூலம் வங்குரோத்து நிலையை அடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. நாம் புதிதாக சிந்தித்து புதிய பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் - என்றும் சொன்னார்.

மேலும் நாட்டின் அபிவிருத்தி- அரச நிதி மற்றும் மறுசீரமைப்பு, முதலீட்டு ஊக்குவிப்பு, சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு, அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு என்ற நான்கு தூண்களில் கட்டியெழுப்பப்படும் என்று தெரிவித்ததுடன், அவை குறித்து விளக்கமும் அளித்தார். (ஐ)

## கிளிநொச்சிக்குள்...

இதன்போதே, மேற்படி உத்தரவை அமைச்சர் தெரிவித்தார்.

வெளி மாகாணங்களை சேர்ந்த அனுமதிப் பத்திரங்களைப் பயன்படுத்தி கிளிநொச்சி மாவட்டத்தில் அகழப்படுகின்ற சட்டவிரோத மணல் பிரதான வீதியால் எடுத்து செல்லப்படுவதால் அவற்றை கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, துறைசார் அமைச்சர், துறைசார் திணைக்கள தலைவர் ஆகியோருடன் தொடர்புகொண்டு கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வெளி மாகாணங்களில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு மணல் எடுத்து வருவது தடை செய்யப்படுவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களாக 2017, 2018ஆம் ஆண்டு காலப் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், அங்கஜன் இராமநாதன், விஜயகலா மகேஸ்வரன் மற்றும் முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் ஆகியோர் செயல்பட்ட காலத்தில் கௌதாரிமுனை பிரதேசத்தில் பெரும் மணல் கொள்ளை இடம்பெற்றதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். அத்துடன், தன்னுடைய காலப் பகுதியில் அவ்வாறான மோசடிகள் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது என்றும் கூறினார். (ஐ)

## வெளிச்சத்தை...

பிரதிநிதிகள் இணைந்து பருத்தித்துறை பிரதேச செயலகம் ஊடாக ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்தனர்.

அந்த மனுவில், "காங்கேசன்துறை தொடக்கம் பருத்தித்துறை வரையான கடல் பிரதேசத்தில் வெளிச்சத்தை பாய்ச்சி சுருக்குவலை தொழில் இடம்பெறுவதனால் எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் பாரம்பரிய முறையில் கடற்றொழிலில் அந்தப் பிரதேசத்தில் தொழில் புரிகின்றோம். ஆனால், 50 சுருக்கு வலைகள், சட்டத்தை மீறி சிறிய மீன்களை பிடிப்பதால் வாழ்வாதாரமும் எதிர்காலமும் பாதிக்கப்படுகின்றது.

இந்த சட்டவிரோத சுருக்குவலை தொழிலை நிறுத்தி எமது பகுதி கடற்றொழில் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை பெறவும் எதிர்காலத்திலும் தொழில் இடம்பெறும் உறுதிப்பாட்டை நிலைசெய்து எமக்கான வழியை காட்டுமாறு 50 முதலாளிகளின் கீழுள்ள 1500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பை எதிர்நோக்குகின்றோம்.

எமது வாழ்வாதாரத்தை துறை சார்ந்தோர் கண்டுகொள்ளாத நிலை தொடர்கின்றது.

அத்துடன், 1997, 2017, 2018ஆம் ஆண்டுகளில் கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தை முழுமையாக அமுல் செய்ய வேண்டும். இதன் மூலம் வட பகுதி கடலையும் சூழலையும் பாதுகாக்க தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - எனவும் ஜனாதிபதியை கோரியுள்ளனர். (ஐ)

# போதைப்பொருட்கள் புறா மூலம் கடத்தல்!

*கல்முனை, ஜூன் 02*

நீண்டகாலமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள்களை நுட்பமாக விநியோகித்து வந்த இரு சந்தேக நபர்களை சாய்ந்த மருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கல்முனையில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டது.

மாறுவேடத்தில் இருந்த பொலிஸாரே இவர்களை கைது செய்தனர். கைதானவர்களிடம் இருந்து 3 கிராமும் 170 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. சிறு சிறு பைக்கெற்றுகளில் அடைக்கப்பட்டு இவை மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட இருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் வீடுகளில் சிலர் வளர்ப்பு புறாக்களின் ஊடாக போதைப்பொருட்களை கடத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக சாய்ந்தமருது பொலிஸாரிடம் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ-01)

## வைப்பு...

அடிப்படைப் புள்ளிகளால் முறையே 13 சதவீதமாக வும், 14 சதவீதமாகவும் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மை நாட்களில் பணவீக்கமானது எதிர்பார்க்கப்பட்டதை விடவும் மிகவேகமாக வீழ்ச்சியடைந்து வருகிறது. பொருளாதாரத்தின் ஏனைய கூறுகளின் சாதகமான போக்கின் விளைவாகவுமே நாணய சபை இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

இதன்படி கடந்த சில மாதங்களுடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் பணவீக்கம் பெருமளவு வீழ்ச்சியடைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள மத்திய வங்கி, அவசியமான நடவடிக்கைகள் மூலம் இவ்வருட இறுதிக்குள் பணவீக்கத்தை ஓர் இலக்கப் பெறுமதிக்குக் கொண்டுவரமுடியும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (ஐ)

## நாடு...

நன்மைக்கே.

கேள்வி : உங்களின் ஒத்துழைப்புடன் தான் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டார் இணக்கமான தன்மை உள்ளதா ?

பதில் : எமது ஒத்துழைப்புடன் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார் - அவ்வளவுதான்.

கேள்வி : ஊடகங்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் ஒலி மற்றும் ஒளி பரப்பு அதிகார சபை சட்டமூலம் கொண்டு வரப்படவுள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன ?

பதில் : அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படாத வகையில் ஊடகங்கள் பாதுகாப்பாக செயல்பட வேண்டும்.

கேள்வி : நாட்டின் தற்போதைய நிலைமை எத்தன்மையில் காணப்படுகிறது ?

பதில் : நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளதை அவதானிக்க முடிகிறது. பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணப்படுகிறது. அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (ஐ)

## எரிபொருள்...

மேலும், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் , லங்கா ஐ. ஓ. சி. என்பவற்றிடம் போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளதால் எரிபொருள் தட்டுப்பாடு குறித்து மக்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை.

சில எரிபொருள் நிரப்பும் நிலைய உரிமையாளர்கள் எரிபொருள் விலை குறைப்பை எதிர்பார்த்து முற்பதிவை தாமதிக்கின்றனர். இதனாலேயே, சில இடங்களில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவியது. எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் குறைந்தபட்சம் 50 சதவீத கையிருப்பை வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். இந்தக் கையிருப்பை பேணாத எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் உரிமத்தை மறுபரிசீலனை செய்து அவற்றை இரத்து செய்யுமாறு பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது - என்றும் தனது ருவிற்றர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## சிமெந்தின்...

ஒழுங்குபடுத்துவது மட்டுமே அரசாங்கத்தால் செய்ய முடியும் என்றும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார். (ஐ)

## முச்சக்கரவண்டி...

2013ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி வவுனியா, மருக்காரம்பளை பகுதியில் உள்ள முச்சக்கர வண்டி சாரதி ஒருவரின் வீட்டில் புதுமனை புகுவிழா இடம்பெற்றது. இந்த நிகழ்வு முடிந்ததும் இரவு நடந்த விருந்துபசாரத்தின் போது அங்கு கலந்து கொண்டவர்களிடையே கைகலப்பு ஏற்பட்டது. இதன் பின் அவரவர் தமது வீடுகளுக்கு சென்றுள்ளனர்.

மறுநாள் 29ஆம் திகதி காலை 7 மணியளவில் வவுனியா இலங்கை வங்கியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் ரயில் கடவையில் சடலம் ஒன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து அந்த சடலம் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டதுடன், முச்சக்கர வண்டி ஒன்றும் குருதிக்கறையுடன் காணப்படுவதாகவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்திருந்தது.

## நெருக்கடி...

.பிரதிநிதிகள் குழுவினர் புதன்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸஉள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் குழுவினரை சந்தித்தனர். இந்த சந்திப்பின் போதே எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் மேலெழுந்து வரும் பொருளாதார நிலை குறித்து விரிவாக விளக்கமளித்த எதிர்க்கட்சித் தலைவர், வீழ்ச்சியடைந்த பல்வேறு துறைகள் தொடர்பிலும் பிரதிநிதிகள் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

இலங்கை இக்கட்டான சூழலை எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நிலையில் இருந்து மீள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

முறையான நிதி முகாமைத்துவத்துக்கு அரசாங்கத்துக்குத் தேவையான செல்வாக்கை பிரயோகிக்குமாறும் வருமான வரி அதிகரிப்பு காரணமாக நாட்டு மக்கள் தாங்க முடியாத அழுத்தத்திலும் கஷ்டத்திலும் வாழ்ந்து வருவதையும் சுட்டிக்காட்டினார்.

வீழ்ச்சியடைந்துள்ள துறைகள் குறித்து ஒவ்வொன்றாக விளக்கமளித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நிலைமையில் இருந்து இலங்கை மீள்வதற்கு கால அவகாசம் தேவை எனவும் தெரிவித்தார்.

இலங்கை பொருளாதாரத் திட்டத்தின் அண்மைய முன்னேற்றப் போக்குகள், எதிர்காலத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள், தடைகள் மற்றும் நிலவி வரும் தாமதங்களைக் குறைப்பதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# 6 பொருள்களின் விலை குறைப்பு

கொழும்பு, ஜுன் 02

லங்கா சதொச நிறுவனம் நேற்று அமுலுக்கு வரும் வகையில், ஆறு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை மீண்டும் குறைத்துள்ளது.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனியின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டு 229 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம் 11 ரூபாவினால் குறைக்கப்பட்டு 114 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

மேலும், ஒரு கிலோகிராம் சிவப்பு பருப்பின் விலை 11 ரூபாவினால் குறைக்கப்பட்டு 314 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 15 ரூபாவினால் 210 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் வெள்ளை நாட்டரசியின் விலை 4 ரூபாவினால் குறைக்கப்பட்டு 175 ரூபாவாகவும் உள்ளது. (அ)

## யாழ். பொது நூலக எரிப்பின் 42ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு







யாழ்ப்பாணம், ஜுன் 02

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டு 42ஆம் ஆண்டு நினைவு நிகழ்வானது நேற்று காலை 9.30 மணியளவில் யாழ் நூலகத்தில் இடம்பெற்றது.

நூலக எரிப்பு நினைவு கூரலுடன் நூலகத்தின் தோற்றுவாய்க்குக் காரணமான செல்லப்பா மற்றும் நூலக எரிப்பு செய்தியறிந்து உயிரிழந்த தாவீது அடிகளாரையும் நினைவு கூர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

குறிப்பாக 1981 ஜுன் முதலாம் திகதி கிழக்காசியாவின் மிகப்பெரிய நூலகமாகக் காணப்பட்ட யாழ். பொது நூலகத்தில் கிட்டத்தட்ட 97000 நூல்களுக்கு மேல் எரியூட்டப்பட்டன.

நேற்றைய நினைவேந்தல் நிகழ்வில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், நூலக ஊழியர்கள், நூலக வாசகர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (அ)

எதிரணிகளின் செல்வாக்கு சரிவு;

# அரச வேலைத்திட்டங்கள் குறித்து தீவிர பிரசாரம் செய்யவேண்டும்!

## ஆளுங்கட்சி எம்.பிக்களுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜுன் 02

**"தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கு குறைந்துவிட்டது. ஐக்கிய மக்கள் சக்தியிலும் எழுச்சி இல்லை. எனவே, அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை நாம் மக்கள் மத்தியில் தீவிரமாக பிரசாரம் செய்ய வேண்டும்."**

-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் இருந்து நாடு திரும்பிய கையோடு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்களுடன் ஜனாதிபதி சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். இதன்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார் என தெரியவருகின்றது.

இதற்கு பதிலளித்த மொட்டு கட்சி செயலாளர் சாகர காரியவசம், உங்களால் முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும். எதுவாக இருந்தாலும் எமது கட்சிக்கு ஒரு தடவை அறிவித்துவிடுங்கள் என கோரிக்கை விடுத்தார்.

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி,

"நெருக்கடியின்போது எவரும் நாட்டை பொறுப்பேற்கவில்லை. நாம் பொறுப்பேற்றோம். மறைபெறுமதியில் இருந்த பொருளாதாரம் தற்போது பூஜ்ஜிய மட்டத்துக்கு வந்துள்ளது. அடுத்து வரும் மாதங்களில் நேர் பெறுமதியை நோக்கி நகரும். ஆகவே, அரசால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் பற்றி மக்கள் மத்தியில் தெளிவுபடுத்துங்கள்."-என்றார்.

இதற்கு கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் சம்மதம் தெரிவித்தனர்.

இதன் அடுத்தக்கட்ட சந்திப்பு எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ)

# கௌதாரிமுனைப் பகுதியில் காற்றாலை மின்நிலையம் அமைக்க அனுமதியில்லை!

கிளிநொச்சி, ஜுன் 02

கிளிநொச்சி கௌதாரிமுனைப் பகுதியில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் அமைப்பதற்கு நேற்றைய கூட்டத்திலும் அனுமதி வழங்கப்படவில்லை.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று காலை 9 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறிதரன், அங்கஜன் இராமநாதன், செ.கஜேந்திரன் மற்றும் திணைக்கள உயர் அதிகாரிகள், பாதுகாப்பு தரப்பினர் எனப் பலருந்த கலந்துகொண்டனர்.

இதன்போது, அதானி குழுமத்தினால் பூநகரி, கௌதாரிமுனை பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலைய விடயம் அபிவிருத்திக் குழுவின் அனுமதிக்காக எடுக்கப்பட்டது. இதன்போது வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் கௌதாரிமுனைக்குச் செல்லும் பிரதான வீதி தொடர்பில் சர்ச்சை எழுந்தது.

குறித்த வீதியை காபெற் வீதியாக அமைப்பது தொடர்பில் எவ்வித உறுதிகளும் வழங்கப்படவில்லை எனவும், அப்பகுதி மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படக்கூடாது எனவும் மக்கள் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் முறையான நடைமுறைகளை பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும், அதன் தொடர்ச்சியாகவே குறித்த திட்டத்துக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கமுடியும் எனவும் முடிவெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வங்கியில் கொள்ளை முயற்சி! அதிகாலை பரபரப்பு சம்பவம்!!

## காத்தான்குடி பொலிஸ் தீவிர விசாரணை

மட்டக்கலப்பு, ஜுன் 02

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி இலங்கை வங்கியை உடைத்துக் கொள்ளையிடும் பாரிய முயற்சி பரபரப்பை ஏற்படுத்தியது.



வங்கி முகாமையாளரின் துரித நடவடிக்கையாலும் சமயோசித செயற்பாட்டினாலும் அது தடுக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 3.00 மணியளவில் குறித்த வங்கியை உடைத்து வங்கியினுள் நுழைந்த கொள்ளையர்கள் பிரதான பாதுகாப்பு பெட்டகம் (லொக்கர்) வைக்கப்பட்டிருக்கும் அறையை உடைத்து உள்ளே நுழைந்து லொக்கரை உடைக்க முயற்சித்தனர்.

இதன்போது வங்கியின் முகாமையாளர் லொக்கரின் கைபிடியில் தனது தொலைபேசி இலக்கத்தை இணைப்புச் செய்திருந்தமையால் லொக்கரைத் தொட்டவுடன் வீட்டிலிருந்த அவரது தொலைபேசியில் எச்சரிக்கை மணி ஒலித்துள்ளது.

இதனையடுத்து துரிதமாகச் செயல்பட்ட முகாமையாளர் உடனடியாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்துக்கு சென்று பொலிஸாரை அழைத்துக் கொண்டு வங்கிக்கு சென்றபோது கொள்ளையர்கள் தப்பியோடிவிட்டனர்.

ஸ்லத்திற்கு விரைந்த தடயவியல் பொலிஸார் மோப்பநாயின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். வங்கியின் சில பகுதிகள் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஈ.பி.டி.பி. அமைப்பாளர் யானை தாக்கி மரணம்

மட்டக்களப்பு, ஜுன் 02

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அமைச்சர் எம்.சி. கனகரட்ணத்தின் புதல்வரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் திருக்கோவில் பிரதேச அமைப்பாளருமான கனகரட்ணம் கங்காதரன் காட்டு யானை தாக்கியதில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தம்பிலுவில் பிரதேசத்தில் உள்ள வயலுக்கு இரவுக் காவல் கடமைக்கு சென்றிருந்த நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவரின் மறைவுக்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் நீரியல் வள அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

ஓய்வு நிலை விவசாய போதனாசிரியரான கங்காதரன் கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கும் மேலாக பொதுநலச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.